பக்கங்கள் – 16

விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

புதன்பொய்கை

சுடர் : 40
கதிர் : 148

புதன்கிழமை
23 ஏப்ரல் 2025

சித்திரை 10 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056







# தபால்மூல வாக்களிப்புக்கு ஏற்பாடுகள் யாவும் பூர்த்தி!

## ஆள் அடையாள உறுதிப்படுத்தலுக்காக அலுவலக அட்டை பயன்படுத்தத் தடை!

**கொழும்பு, ஏப்ரல் 23**

உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு, தபால்மூல வாக்களிப்பு நாளை ஆரம்பமாகவுள்ள நிலையில், அதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் முழுமையடைந்துள்ளன என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

15

தெல்லிப்பழை மருத்துவமனையில்

## அத்துமீறிய பெண்ணொருவரால் மருத்துவர்களுக்கு உயிரச்சுறுத்தல்

### விசாரணைகளைத் தொடர்வதற்கு பொலிஸ் தரப்பினர் அசமந்தம்

யாழ்ப்பாணம், ஏப். 23

தெல்லிப்பழை மருத்துவமனையின் அவசர சிகிச்சைப்பிரிவுக்குள்நுழைந்த பெண்ணொருவர், மருத்துவர்களுக்கு உயிரச்சுறுத்தல் விடுக்கும் வகையில் செயற்பட்டுள்ளார். இது தொடர்பான விசாரணைகளை தெல்லிப்பழைப் பொலிஸார் இழுத்தடித்து

15

## டான் பிரியசாத் மீது நேற்றுத் துப்பாக்கிச்சூடு

### உயிரிழப்புத் தொடர்பில் முன்பின் முரண் தகவல்

கொழும்பு, ஏப். 23

கடும்போக்கான இனவாத அரசியலை முன்னெடுத்த ராஜபக்ச அணியின் அரசியல்வாதியான டான் பிரியசாத் மீது நேற்றிரவு துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது. அவர் உயிரிழந்துவிட்டார் என

15

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில்

## ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையை ஆராயக் குழு!

கொழும்பு, ஏப். 23

உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் தொடர்பில், ஜனாதிபதி ஆணைக்குழுவால் முன்வைக்கப்பட்டுள்ள அறிக்கையை ஆராய்வதற்கும் விசாரணைகளை முன்னெடுப்பதற்கும் நால்வர் கொண்ட பொலிஸ் குழுவொன்றை நியமித்துள்ளதாக பொலிஸ் பேச்சாளர் புத்திக மானதுங்க

16

## கிணற்றுக்குள் ஆசிரியையின் சடலம் மீட்பு!

விரிவு பக்:-15

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு கொள்கை ரீதியில் முழுமையான ஆதரவு



### முன்னாள் எம்.பி. சரவணபவன் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 23

உள்ளூராட்சித் தேர்தலில், தனது முழுமையான ஆதரவு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு உள்ளதாக நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் அறிவித்துள்ளார். தமிழ்த் தேசியப் பாதையில் பயணிப்பதற்கு,

15



‘இஞ்ச தமிழருக்கு ஒரு நீதி, சிங்களவருக்கு ஒரு நீதிதான் கண்டியளோ’



வேட்பாளர்களுக்கு ஒழுங்கமைத்த கூட்டத்துக்குச் செல்லாததால்

## துப்பாக்கி முனையில் மகனும், தாயும் கைது

### வடமராட்சியில் பொலிஸார் அராஜகம்

யாழ்ப்பாணம், ஏப். 23

வேட்பாளர்களின் கூட்டத்துக்கு செல்லாததால் அந்த வேட்பாளரையும்,

15

## பாப்பரசர் பிரான்ஸிஸின் இறுதிச்சடங்கு சனியன்று



விரிவு பக்:-15


இலங்கைக்குக் கடத்தப்பட்ட

## அழகுசாதனப் பொருள்கள் மன்னார்க் கடலில் மீட்பு

யாழ்ப்பாணம், ஏப். 23

சட்டவிரோதமான முறையில் இலங்கைக்குக் கடத்தப்பட்ட அழகுசாதனப் பொருள்கள் மன்னார்க் கடற்பரப்பில் வைத்து கடற்படையால் மீட்கப்

15

அசோக் TMT

அதிகூடிய பலம் வாய்ந்த கம்பிகள்

யானையின் எடையைப் போல் பன்மடங்கு எடையைத் தாங்கக்கூடிய பலம் கொண்டதோடு, பல நூற்றாண்டுகள் நிலைத்து நிற்கக்கூடிய கட்டிடங்களுக்கும், வீடுகளுக்கும், சந்தையில் உங்களுக்கு மிக அருகாமையில் இலகுவாக கிடைக்கக்கூடிய அதிகூடிய பலம் வாய்ந்த அசோக் TMT கம்பிகளை பயன்படுத்தி முறுக்குக் கம்பி பெறுமதியிலும் பார்க்க 15 சதவீத சேமிப்பை அனுபவித்திடுங்கள்.

பலம் வாய்ந்த கட்டுமானத்திற்கு - அசோக் TMT

ashok STEEL

நீடித்த வலிமை

மத்திய மாகாணம் - 0773825832
வட மேல் மாகாணம் - 0773455128
மேல் / தென் மாகாணம் - 0766773659
வடக்கு மாகாணம் - 0773781397
உடனடி அழைப்புகள் - 011 7388940-3

ஒரு மெட்ரிக் டொன் இற்கு ரூ. 232,000 + VAT

SIS 375




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 22.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4051 |
| ஆங்கில எழுத்து | J |
| வெற்றி இலக்கங்கள் | 12 47 58 67 |
| விசேட எழுத்து | J |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 22.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1118 |
| வெற்றி இலக்கினம் | மேஷம் |
| வெற்றி இலக்கங்கள் | 29 31 49 53 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 22.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0077 |
| ஆங்கில எழுத்து | H |
| வெற்றி இலக்கங்கள் | 3 5 8 5 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 22 .04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2157 |
| ஆங்கில எழுத்து | S |
| சுப்பர் இலக்கம் | 25 |
| வெற்றி இலக்கங்கள் | 04 24 42 64 |


| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 22.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5809 |
| ஆங்கில எழுத்து | G |
| வெற்றி இலக்கங்கள் | 6 4 4 3 1 5 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 22.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1839 |
| ஆங்கில எழுத்து | X |
| வெற்றி இலக்கங்கள் | 29 50 54 81 |
| விசேட எழுத்து | X |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 22.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0384 |
| ஆங்கில எழுத்து | G |
| வெற்றி இலக்கங்கள் | 4 3 1 5 |

# சிங்கள மேலாதிக்கம் காலூன்ற மக்கள் இடங்கொடுக்கக்கூடாது

## சி.வி.கே.சிவஞானம் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், ஏப்.23**

**வடக்கில் காலூன்ற நினைக்கும் தேசிய மக்கள் சக்தியின் சிங்கள மேலாதிக்கத்துக்கு மக்கள் மறுபடியும் இடங்கொடுக்கக்கூடாது என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

உள்ளூராட்சி தேர்தலில் தமிழரசுக் கட்சி இம்முறை வடக்கு, கிழக்கில் 58 சபைகளில் போட்டியிடுகின்றது. சிறப்பான வேட்பாளர்களை நாம் நிறுத்தியுள்ளோம். ஊழல் இல்லாத சபைகளுக்கே நிதி என்று கூறுவதை ஏற்கமுடியாது. கடந்தகாலத்தில் வடக்கு மாகாணத்துக்கு அனுப்பட்ட நிதியில் எந்த நிதி திருப்பி அனுப்பப்பட்டது என்பதை எவராவது நிரூபியுங்கள் எனச் சவால் விடுக்கின்றேன். ஒவ்வொரு உள்ளூராட்சி சபைகளிலும் அந்தந்தப் பிரதேசங்களின் தமிழர் பூர்வீகக் கட்சிகளின் பிரதிநிதிகளை மக்கள் தேர்ந்தெடுப்பது அவசியம். அநுரகுமார நினைத்திருந்தால் அரசியற்கைதிகளைப் பொதுமன்னிப்பின் கீழ் விடுவித்திருக்கலாம். ஆனால் அவர்கள் செய்யமாட்டார்கள். அங்குள்ள அரசியற் கட்சிகளுக்குள் இவர்களே மிகவும் இனவாதத்துடன் பயணிப்பவர்கள் - என்றார். (ஏ-125)



# நீதிமன்றில் முன்னிலையாக தேசபந்துவுக்கு உத்தரவு

கொழும்பு, ஏப்.23

நீதிமன்றில் பிணை பெற்றுச் செல்லும்போது நீதிமன்ற உத்தரவை மீறிச்சென்றமை தொடர்பாக எதிர்வரும் 25 ஆம் திகதி மாத்தறை நீதிமன்றில் முன்னிலையாகவேண்டும் என்று தேசபந்து தென்னக்கோனுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. தேசபந்து தென்னகோனை நீதிமன்றத்துக்கு வெளியே அழைத்துச் செல்லப் பயன்படுத்தப்பட்ட காரின் உரிமையாளரையும் நீதிமன்றில் முன்னிலையாக உத்தரவிடப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி தேசபந்து தென்னக்கோன் பிணை பெற்று மாத்தறை நீதிவான் நீதிமன்ற வளாகத்திலிருந்து வெளியேறியபோது நீதிமன்ற உத்தரவுகளை மீறியுள்ளார் என்று சட்டமா அதிபர் நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் மனு ஒன்றின் ஊடாக சமர்ப்பணங்களை முன்வைத்த நிலையில், இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ஏ-இ)

# அம்மாவை விடுவியுங்கள் பிள்ளைகள் கோரிக்கை!



யாழ்ப்பாணம், ஏப். 23

அரசியற் காரணங்களுக்காக சிறையில் இருக்கும் தனது தாயாரான தயாபரராஜ் உதயகலாவை அவரது உடல்நலம் கருதியும், சிறுவர்களான எமது நலன்கருதியும் சிறையிலிருந்து விடுவிப்பதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அவரது பிள்ளைகள் கோரிக்கை விடுத்துள்ளனர். யாழ். ஊடக அமையத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடத்திய ஊடக சந்திப்பில் அவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

சர்வமக்கள் கட்சியின் உருவாக்கத்தால் பிள்ளையானுடன் ஏற்பட்ட முரண்பாடுகளால் தனது தாயார் தண்டனைக் கைதியாக சிறையில் இருக்கின்றார். எமது தாயார் அரசியற் சூழ்ச்சி காரணமாக சிறையில் இருப்பதால் நாம் நான்கு சகோதரர்களும் பாட்டியின் பராமரிப்பில் தற்போது பல அசௌகரியங்களுடன் வாழ்ந்துவருகின்றோம்.

எனவே மனிதாபிமானமான நடவடிக்கையாக எமது தாயாரை விடுவிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-125,27)

# சிறைக்காவலர்களுக்கு பாதாளக்குழு மிரட்டல்

கொழும்பு, ஏப்.23

சிறைச்சாலை வளாகத்தினுள் சட்டவிரோதச் செயற்பாடுகளில் ஈடுபடும் கைதிகளுக்கு ஒத்துழைப்பு வழங்காவிட்டால் உங்களை கொலைசெய்வோம் எனப் பாதாள உலகக் குழுவினர் சிறைக்காவலர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளனர் என சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் காமினி திசாநாயக்க தெரிவித்துள்ளார். இது குறித்து பொலிஸ்மா அதிபர், புலனாய்வுப்பிரிவு, ஜனாதிபதி ஆகியோருக்குக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

அண்மையில் புதுக்கடை நீதிமன்றில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தையடுத்து கைதிகளை வெளியே அழைத்துவரும்போது விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-25,6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 22.04.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| வெற்றி வாரம் | 0517 |
| ஆங்கில எழுத்து | O |
| வெற்றி இலக்கம் | 1 0 6 3 4 7 |

| Super Ball DLB | |
|---|---|
| திகதி | 22.04.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 2783 |
| ஆங்கில எழுத்து | U |
| வெற்றி இலக்கம் | 20 32 34 66 |

| சனிதா DLB | |
|---|---|
| திகதி | 22.04.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| ஆங்கில எழுத்து | U |
| வெற்றி இலக்கம் | 15 28 44 75 |
| வெற்றி வாரம் | 4944 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி | 22.04.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| வெற்றி வாரம் | 0667 |
| வெற்றி இலக்கம் | 15 17 48 |

| லக்ன ராசி DLB | |
|---|---|
| திகதி | 22.04.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| கும்பம் | |
| வெற்றி இலக்கம் | 08 26 47 51 |
| சீட்டிழுப்பு வாரம் | 4495 |

| KAPRUKA DLB | |
|---|---|
| திகதி | 22.04.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| ஆங்கில எழுத்து | E |
| சுப்பர் இலக்கம் | 38 |
| வெற்றி இலக்கம் | 09 14 42 50 |
| வெற்றி வாரம் | 1959 |

| அத கோடிபதி DLB | |
|---|---|
| திகதி | 22.04.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| ஆங்கில எழுத்து | R |
| வெற்றி இலக்கம் | 40 44 54 74 |
| வெற்றி வாரம் | 2609 |

# உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் குற்றவாளிகளைத் தண்டிப்போம்

**இளங்குமரன் எம்.பி. உறுதி**



கிளிநொச்சி, ஏப். 23

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பாக நாங்கள் நீதியைப் பெற்றுத்தரமாட்டோம் என்று பலர் கூறுகின்றனர். உண்மையான நீதியைச் சட்டத்துறை மூலம் பெற்றுக்கொடுப்போம் என நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் கிளிநொச்சி கட்சி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகச் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பான அறிக்கையை பாதுகாப்பு அமைச்சர் சமர்ப்பித்துள்ளார். அதற்கான பூர்வாங்க வேலைகள் நிறைவுபெற்றுள்ளன. வெகுவிரைவில் குற்றவாளிகள் மக்கள் முன் நிறுத்தப்படுவார்கள். நாங்கள் கூறிய அனைத்தையும் செய்வோம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-25,113)

ஈஸ்டர் தாக்குதல் விசாரணை

# அசாத் மௌலானாவை அழைத்துவரத் திட்டம்!



கொழும்பு, ஏப். 23

**உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் தொடர்பான விசாரணைக்காக அசாத் மௌலானாவை வெளிநாட்டில் இருந்து அழைத்து வருவதற்கு ஆராயப்படுகின்றது என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.**

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போது, 'பிள்ளையான் கைது செய்யப்பட்டுள்ளார். பிள்ளையானின் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளார். பிள்ளையானின் செயலாளராக இருந்த அசாத் மௌலானா சனல் 4 தொலைக்காட்சியிடம் முக்கியமான தகவல்களை வெளியிட்டிருந்தார். அவரை நாட்டுக்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்கப்படுமா...?' என்று அமைச்சரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

இந்தக் கேள்விக்கு அமைச்சர் வழங்கிய பதிலாவது:-

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றோம். எனவே, அசாத் மௌலானாவை இலங்கைக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும். அது தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன - என்றார். (அ-ம-44)

## கொழும்புபாதுகாப்புக் கூட்டிணைவு செயலாளராக இந்தியர் நியமிப்பு

கொழும்பு , ஏப். 23

கொழும்பு பாதுகாப்புக் கூட்டிணைவுக்கு ஓய்வுபெற்ற இந்திய சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவரை முதலாவது செயலாளர் நாயகமாக நியமிக்கவுள்ளதாக இந்திய ஊடகவியலாளர் ஒருவர் சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார். கொழும்பு பாதுகாப்புக் கூட்டிணைவானது, இந்துசமுத்திர பிராந்தியத்தில் கடல்சார் பாதுகாப்பை பலப்படுத்தும் நோக்குடன் 2024 ஆம் ஆண்டு இந்தியா, இலங்கை, மாலைதீவு ஆகிய நாடுகள் இணைந்து உருவாக்கிய பாதுகாப்பு ஒத்துழைப்புக் கட்டமைப்பாகும்.

சட்டவிரோதச் செயற்பாடுகள், பயங்கரவாதச் செயற்பாடுகள், அனர்த்த நிவாரணம், டிஜிற்றல் தொழில்நுட்ப பரிமாற்றம் போன்ற விடயங்களில் ஒன்றிணைந்து செயற்படுவதே இந்தக் கட்டமைப்பின் நோக்கமாகும். (ச-25, 6)



## வெள்ளை ஈ வீரியம் தென்னைகள் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 23

தற்போது நிலவும் கடும் வெப்பமான சூழ்நிலை காரணமாக தென்னைகளில் வெள்ளை ஈக்களின் தாக்கம் அதிகரித்துள்ளதாக செய்கையாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

வெள்ளை ஈக்களின் பாதிப்பால் அதிகளவான தென்னை ஓலைகள் கருகி வீழ்கின்றன. வெள்ளை ஈக்களைக் கட்டுப்படுத்துவதற்கான எவ்வித நடவடிக்கைகளும் விவசாயத்துறையினரால் எடுக்கப்படவில்லை என்றும் செய்கையாளர்கள் சுட்டிக்காட்டிக்காட்டியுள்ளனர்.

அதேவேளை தேங்காய் உற்பத்தி வீழ்ச்சியுறுவதால் அவற்றின் விலை மேலும் அதிகரித்துச்செல்வதாக நுகர்வோரால் தெரிவிக்கப்படுகின்றது. (ச-25, 17)

## அரசியல்வாதிகளுக்கு அருகதையில்லை!

### டக்ளஸ் தெரிவிப்பு

பிறிதொருவர் மீதான குற்றச்சாட்டுகள் தொடர்பில் தேர்தல் மேடைகளில் கூச்சலிட்டு விமர்சிப்பவர்கள் அரசியலில் ஆதாயம் தேடுபவர்களே என ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். தேர்தல் ஆணைக்குழு தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற கட்சித் தலைவர்களுக்கு இடையிலான சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், ஊடகங்கள் வாயிலாகவும் சமூக ஊடகங்களிலும் அரசியல் செயற்பாட்டாளர்களின் கைதுகள் தொடர்பாக பேசப்படுகிறது. யாருக்கு எதிராகவேனும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுமாயின் அவை தொடர்பாக நீதிமன்றங்களும் நீதிக்கட்டமைப்புகளுமே நடவடிக்கை எடுக்கவேண்டுமேதவிர அரசியல்வாதிகள் அல்ல. அரசியலில் ஆதாயம் தேடுபவர்கள் பிறிதொருவரின்குற்றச்சாட்டுகளை தேர்தல் மேடைகளில் விமர்சிப்பதற்கு அருகதையற்றவர்கள் - என்றார். (ச-125)

## ஓட்டோ-ஹைஎஸ் விபத்து இருவர் படுகாயம்



யாழ்ப்பாணம், ஏப். 23

யாழ். வேலணை மண்கும்பானில் இடம்பெற்ற வீதி விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர் என ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலைய தலைமைப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். ஊர்காவற்றுறையிலிருந்து யாழ். நோக்கிப் பயணித்த முச்சக்கரவண்டி ஒன்றை அதே திசையில் பயணித்த ஹைஎஸ் வாகனம் பின்புறமாக மோதித்தள்ளியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளது. இதில் காயமடைந்த இருவர் யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். (ச-25,125)




நங்கூரம் போட்ட கப்பல் காத்துக்கு அடிபட்டுப்போகாமல்நிண்டுபிடிக்கும். ஆனால் இலங்கை மாதிரி நாட்டில கப்பலை விட்டிட்டு நங்கூரம் மட்டும் காத்துக்கு அடிபட்டுப் போற சம்பவங்களும் நடக்கத்தான் செய்யுது. நெடுந்தீவுக்கும் குறிகாட்டுவானுக்கும் இடையில ஓடித்திரிஞ்ச நெடுந்தாரகைப் படகு இந்தமுறை மாரிமழைக்குள்ள சிக்கி, சின்னா பின்னப்படக்கூடாது எண்டு வழக்கமா தரிக்கிற இடத்தில இருந்து மாத்தி, பாதிப்புக் குறைவா இருக்கிற இடத்தில விட்டு நங்கூரம் பாய்ச்சினவை. மழையும், காத்தும் நிண்டபிறகு போய்ப்பார்த்தவைக்கு பெரிய அதிர்ச்சி. உந்தக் காத்துக்கும் மழைக்கும் கலங்காமல் நெடுந்தாரகைப்படகு அப்பிடியே நிக்க, அதின்ர நங்கூரத்தை மட்டும் காணேலையாம்.

நெடுந்தாரைகைப் படகு வீதி அதிகார சபைக்குச் சொந்தமா இருந்தாலும், அதை ஓடுறதும் நேவிக்காரர்தான். நெடுந்தாரகைப்படகு பத்திரமா இருக்கட்டும் எண்டு நேவிக்காரர்தான் இடம் மாத்தினவையாம். அதோட கரைக்குக் கிட்டவாத்தான் நங்கூரம் போட்டிருந்தவை. அப்ப கிட்டத்தானே எங்கேயோ அது கிடக்கும். வழக்கமா இப்பிடி ஏதும் கடலுக்க துலைஞ்சால் நேவிக்காரரின்ர சுழியோடுற குரூப்தான் தேடி எடுத்துக்குடுக்கிறவை. அப்பிடி நடுக்கடலுக்கையே சுழியோடிற நேவிக்காரர், கரையில கட்டியிருந்த நங்கூரத்தைத் தேடவுமில்லை, எடுத்துக் குடுக்கவுமில்லை. பிறகு நாலுமாதமா வட தாரகையின்ர நங்கூரத்தைத்தான் நெடுந்தாரகைக்கு மாத்தி பாவிச்சிருக்கினம்.

இனியும் நேவிக்காரர் சுழியோடி நங்கூரத்தை எடுத்துத்தருவினம் எண்ட நம்பிக்கை இல்லாமல் போனதால, இப்ப வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்காரரே மூன்று லட்சம் ரூவாவுக்கு புதிசா ஒரு நங்கூரம் வாங்கியிருக்கினமாம். ஆனால் காணாமல் போன நங்கூரம் இதைவிட நாலைஞ்சு மடங்கு பெறுமதி கூடினதாம். ஜப்பானில இருந்துதான் அதை வாங்கினவை. அப்பிடித் திறமான பெறுமதியான நங்கூரத்தை கரையில சுழியோடி எடுக்கிறதில ஏன் நேவிக்காரர் பின்னடிக்கினம் எண்டதுதான் பெரும் மர்மமா இருக்கு. 'ஒருவேளை அவை இது ஜப்பான் நங்கூரம் எண்டிட்டு தங்கட படகுகளுக்கு பாவிக்க எடுத்திட்டினமோ?' எண்டதும் அங்கத்தைச் சனத்தின்ர டவுட். எல்லாம் கடலுக்குத்தான் தெரியும்.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். ஆனாலும், புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்த்துவிடுவது நல்லது. பிற்பகலுக்குமேல் வாழ்க்கைத்துணைவழி உறவி னர்களால் திடீர் செலவுகள் ஏற்படும். இளைய சகோதர வகையில் காரியங்கள் அனுகூலமாகும்.

**இடபம்:** குடும்பம் தொடர்பான முடிவுகளை எடுப்பதில் பொறுமை மிக அவசியம். குடும்பத்தில் மற்றவர்களுடன் அனுசரனையாக நடந்துகொள்ள வும். கணவன் மனைவிக்கி டையே சிறு சிறு மனஸ்தாபங்கள் ஏற்படக்கூடும். ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது.

**மிதுனம்:** வழிபாட்டின் மூலம் தெளிவுபெற முயற்சிக்கவும். உறவினர்கள் வருகையால் செலவுகள் அதிகரிக்கக்கூடும். வாழ்க்கைத் துணை முரண்டு பிடித்தாலும் கடுமை காட்டாமல் விட்டுக்கொடுத்துச் செல்லவும். தந்தையிடம் எதிர்பார்த்த காரியம் இழுபறியாகும்.

**கடகம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சகோதர வகையில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். தந்தைவழி உறவினர்களால் சில பிரச்னைகள் குடும்பத்தில் ஏற்படக்கூடும். பிற்பகலுக்கு மேல் நண்பர்கள் மூலம் எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடியும்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள் வார்கள். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் மகிழ்ச்சி உண்டாகும். சிலருக்கு எதிர்பாராத பண வரவுக்கு வாய்ப்பு உண்டு. வியாபாரத்தில் சகவியாபாரிகளால் சிறு சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது.

**கன்னி:** தந்தையிடம் எதிர்பார்த்த உதவி கிடைப்பதில் சற்று தாமதம் ஏற்படும். கணவன் மனைவிக்கி டையே அந்நியோன்யம் அதிகரிக்கும். எதிரிகளின் தொல்லைகள் நீங்கும். பழைய கடன்களைத் தந்து முடிக்கும் வாய்ப்பு ஏற்படும். வியாபாரம் வழக்கம்போல் நடைபெறும்.

**துலாம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே கவனம் செலுத்தவும். புதிய முயற்சிகள் தவிர்க்கவும். பிள்ளைகளின் உடல் ஆரோக்கியத் தில் கவனம் தேவை. உறவினர்கள் உதவி கேட்டு வருவார்கள். தாய்மாமன் வழியில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும்.

**விருச்சிகம்:** திடீர் செலவுகள் ஏற்பட்டாலும் கடன் வாங்காமல் சமாளித்துவிட முடியும். பிள்ளைகள் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். நண்பர்கள் வகையில் சில பிரச்னைகள் ஏற்படக்கூடும் என்றாலும் அதனால் பாதிப்பு எதுவும் இருக்காது.

**தனுசு:** பொறுமை அவசியம். நீண்டநாள்களாக பிள்ளைகள் கேட்டுக்கொண்டிருந்ததை வாங்கித் தந்து அவர்களை மகிழ்ச்சியடையச் செய்வீர்கள். கணவன் மனைவி இருவரும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத் துச் செல்லவும்.

**மகரம்:** எந்த விஷயத்திலும் பொறுமையுடன் சிந்தித்துச் செயல்படவேண்டிய நாள். குடும்பத்து உறவினர்களுடன் வீண்விவாதம் செய்யாமல் இருப்பதன் மூலம் மனஅமைதி கிடைக்கும். நண்பர்களுக்காக செலவு செய்ய நேரிடும்.

**கும்பம்:** குடும்பத்தில் உள்ளவர்களின் தேவை களை நிறைவேற்ற செலவு செய்ய நேரிடும் என்பதால், கையிருப்பு கரையும். வாழ்க்கைத் துணை உங்கள் முயற்சிகளுக்கு ஆதரவாகவும் உதவிகரமாகவும் இருப்பார்.

**மீனம்:** புவாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண் டாகும். வாழ்க்கைத்துணை உங்கள் தேவையைப் பூர்த்தி செய்வார். பிற்பகலுக்கு மேல் சகோதரர் களால் சில பிரச்னைகள் ஏற்பட்டு நீங்கும். உறவினர்களால் குடும்பத்தில் குழப்பங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் எச்சரிக்கையாக இருக்கவும்.

# இந்தியாவின் காஷ்மீரில் பயங்கரவாதத் தாக்குதல்

## சுற்றுலாவிகள் உட்பட 25 பேர் பலி!



**புதுடெல்லி, ஏப். 23**

**இந்தியாவின் காஷ்மீர் மாநிலத்தில் நேற்று இடம் பெற்ற பயங்கரவாதத் தாக்குதலில், சுற்றுலாவிகள் உட்பட 25 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.**

காஷ்மீரின் பிரபலமான சுற்றுலாத் தலமாக விளங்கும் 'பகல்காம்' பகுதியிலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. ஒட்டுமொத்த இந்தியாவையும் பெரும் அதிர்ச்சிக்குள் தள்ளியுள்ள இந்தத் தாக்குதலுக்குப் பாகிஸ்தானைத் தளமாகக் கொண்டு செயற்பட்டுவரும் லஃஷ்ர் இ தொய்பாவின் நிகழ் அமைப்புகள் பொறுப்பேற்றுள்ளன.

தாக்குதல்களுக்குப் பிரதமர் மோடி கண்டனம் தெரிவித்துள்ளார். 'காஷ்மிரில் இடம்பெற்றுள்ள தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தத் தாக்குதலின் பின்னணியில் உள்ளவர்கள் எவராக இருந்தாலும், அவர்கள் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பிக்க முடியாது' என்றும் பிரதமர் மோடி அறிவித்துள்ளார்.

(ம)

# லக்னோவைத் தோற்கடித்து டெல்லி அபாரமான வெற்றி



**ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் லக்னோவைத் தோற்கடித்து அபார வெற்றிபெற்றது டெல்லி.**

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற டெல்லி, முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய லக்னோ அணிக்கு ஆரம்ப வீரர்களாக மார்க்கம் மற்றும் மிச்செல் மார்ஷ் இருவரும் களமிறங்கினார்கள். அணி 10 ஓவர்களில் 87 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில், 52 ஓட்டங்களுடன் ஆட்டமிழுந்தார் மார்க்கம். மிச்செல் மார்ஷ் 45 ஓட்டங்களைப் பெற்றார். பூரன், அப்துல் சமட் இருவரும் அடுத்தடுத்து ஏமாற்றினார்கள். 9 ஓட்டங்களுடனும் பூரனும், 2 ஓட்டங்களுடன் சமட்டும் ஆட்டமிழந்தனர். மில்லர் 14 ஓட்டங்களைப் பெற்றாலும், இதற்காக அவர் 15 பந்துகளை எதிர்கொண்டார். பின் வரிசையில் பதோனி பெற்ற 36 ஓட்டங்களே அதிகபட்சம். 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 159 ஓட்டங்களைப் பெற்றது லக்னோ.

பந்துவீச்சில் முகேஸ் குமார் 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய டெல்லி அணிக்கு, கருண் நாயர் 15 ஓட்டங்களுடன் ஏமாற்றினாலும், போரல் மற்றம் ராகுல் இருவரும் மிகச் சிறப்பாக விளையாடி அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றனர். இருவரும் அரைச்சதம் கடக்க டெல்லி அணி பலம் பெற்றது. 51 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் போரல். அணித்தலைவர் அக்சர் பட்டேல் 20 பந்துகளில் 34 ஓட்டங்களைச் சேர்த்தார். 13 பந்துகள் மீதமிருக்கையில் டெல்லியை வீழ்த்தியது லக்னோ. ராகுல் 57 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார்.

(ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

## தப்பிவிடக்கூடாது குற்றவாளிகள்!

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப் பட்டிருக்கின்றது. அண்மையில் அநுராதபுரத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, அரச அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காகவே உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் நடத்தப்பட்டது என்று பகிரங்கமாகத் தெரிவித்திருந்தார். உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் விசாரணைகள் வேகமெடுத்திருக்கும் நிலையில் ஜனாதிபதி தெரிவித்திருக்கும் இந்தக் கருத்து, அரசியல்வாதிகள் பலரும் இந்த விவகாரத்துடன் தொடர்புபட்டுள்ளனர் என்பதைத் தொட்டுக் காட்டியிருக்கின்றது.

இலங்கையில் 2019ஆம் ஆண்டு ஈஸ்டர் ஞாயிற்றுக் கிழமை நடந்த தற்கொலைத் தாக்குதல்கள் நாட்டின் அமைதியை அடியோடு அழித்தன. 250க்கும் மேற்பட்ட உயிர்கள் பலியான இந்த வன்முறைச் செயல்களுக்குப் பின்னால் இஸ்லாமிய தீவிரவாதக் குழுக்கள் இருந்தன என்று அரசாங்கம் ஆரம்பத்தில் கூறினாலும், இந்தத் தாக்குதலின் சூத்திரதாரிகள் யார் என்பதில் ஒரு குழப்பம் நீடித்தே வந்தது. இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணைகள் வெளிப்படைத் தன்மையுடன் நடக்காமையும், கடந்த அரசாங்கங்கள் அந்த விசாரணைகளில் அக்கறையற்றிருந்ததும் இந்தப் பயங்கரவாதத் தாக்குதலின் பின்னணி தொடர்பான சந்தேகத்தை ஏற்படுத்தியிருந்தது. ஈஸ்டர் தாக்குதல் சதித்திட்டத்தில் அரசியல் நோக்கங்கள் இருந்தன என்ப தற்கு நூற்றுக்கு நூறு சாத்தியங்கள் இருந்தன. ஆனால் கடந்தகால விசாரணைகள் ஒரு குறிப்பிட்ட தரப்பினரைக் குற்றவாளியாக்கி அத்துடன் இந்த விவகாரத்தை முடித்துவிடும் நோக்கத்துடனே நடைபெற்றிருக்கின்றன. தற்போதைய ஜனாதிபதி கூறுவது போன்று, 2019ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த அரசாங்கத்துக்கோ, அதைத் தொடர்ந்து வந்த அர சாங்கத்துக்கோ இந்தத் தாக்குதலுடன் தொடர் புடைய சூத்திரதாரிகளைச் சட்டத்தின் முன் கொண்டுவருவதற்கான நோக்கம் இருக்கவில்லை.

ஈஸ்டர் தாக்குதலின் பின்னணியில் உள்ளவர்கள் யார் என்பதைக் கண்டறிவதும், நீதியை நிறைவேற்றுவதும் மிகவும் அவசியம். எனினும், இந்தச் செயல்முறை அரசியல் பூசல்களுக்கு ஆளாகாமல், சட்டத்தின் கீழ் நடைபெறவேண்டும். ஒரு நீதியான விசாரணையே இலங்கையின் பல்வேறு சமூகங்களுக்கிடையேயான நம்பிக்கையை மீண்டும் உருவாக்கும் என்பதை தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் கருத்திற்கொள்ளவேண்டும். ஒரு தரப்பை அல்லது ஒருவரை இந்த விவகாரத்தில் பலிக்கடாவாக்க முயலாமல் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சூத்திரதாரிகள், இந்தக் கொடூரச் செயலுக்குத் துணைபோனவர்கள் என அனைவரையும் சட்டத்தின் முன்பாக நிறுத்துவது அவசியம்.


இலங்கையின் அரசியல் வரலாறு, பல்வேறு அரசாங்கங்களின் காலத்தில் அரசியல் நோக்கங்களுக்கு அல்லது தேர்தல் அரசியலுக்காகக் கைதுகளை செய்யும் பழக்கத்தைக் கொண்டுள்ளது. ஈஸ்டர் தாக்குதல் விசாரணை அதைப்போன்ற ஒரு சார்புடைய நடவடிக்கையாக மாறிவிடாமல், வெளிப்படையான நீதித்துறை செயல்முறைகளின் மூலம் நிரூபிக்கப்படவேண்டும். ஈஸ்டர் தாக்குதல் போன்ற துயரங்கள் மீண்டும் நிகழாமல் தடுப்பதற்காக, உண்மையான குற்றவாளிகள் கண்டறியப்பட்டு தண்டிக்கப்படவேண்டும். ஆனால், இந்தச் செயல்முறை எந்தவொரு அரசியல் சூழ்நிலைக்கும் ஆட்படாமல், சட்டத்தின் மேலாதிக்கத்தின் அடிப்படையில் நடைபெறவேண்டும். அரசாங்கம் விசாரணைகளை விரைவாகவும் வெளிப்படையாகவும் மேற்கொள்ளவேண்டும். அதை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் செய்யுமானால், இலங்கையின் வரலாற்றில் உண்மையாகவே மாற்றத்தைக் கொண்டுவந்த அரசாக பெயர்பெற்றிருக்கும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளொரு நல்வார்த்தை

காரியத்தின் முக்கியத்துவத்தைவிட காரியம் செய்யும் காலத்தின் முக்கியத்துவமே பிரதானம்.

– கண்ணதாசன் –



## நெருக்கடியை எதிர்கொண்டுள்ள நாட்டின் ஏற்றுமதிப் பொருளாதாரம்

**கொழும்பு, ஏப்.23**

**இலங்கையின் ஏற்றுமதிப் பொருளாதாரம் கடுமையான நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது என்று பொருளாதார ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.**

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் இலங்கை மீது விதித்த வரியின் உண்மையான விகிதம், தற்போது 90 நாள்களுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அமெரிக்கா விதித்துள்ள வரி 44 சதவீதம் அல்ல எனவும் அது 54 சதவீதம் என்றும் சுட்டிக்காட்டியுள்ள அவர்கள், இலங்கையின் பொருளாதாரம் கடுமையான ஆபத்தில் உள்ளது என்றும் எச்சரித்துள்ளனர்.

இந்த நெருக்கடியிலிருந்து நிவாரணம் பெற அமெரிக்காவுக்கு பிரதிநிதியமைச்சர் அனுப்பப்பட்டுள்ளார் என்று அரசாங்கம் அறிவித்திருந்தாலும், ஆபத்தை நிர்வகிக்க இது போதுமானதாக இல்லை என்று பொருளாதார ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். (எ-இ)



## குஷ் போதை ஒருவர் கைது

கொழும்பு, ஏப். 23

மாதம்பிட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் குஷ் போதைப்பொருளுடன் 45 வயதான சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத்தகவலின் அடிப்படையில் நடத்திய சோதனையின்போதே அவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரிடம் இருந்து 2 கிலோகிராம் 34 மில்லிகிராம் நிறையுடைய குஷ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-சி)

## லொறி பஸ் விபத்து 22 சிப்பாய்களுக்கு காயம்

கொழும்பு, ஏப். 23

நிட்டம்புவ கிரிந்திவெலப் பகுதியில் இராணுவத்தினரை ஏற்றிச்சென்ற பஸ் ஒன்று விபத்துக்குள்ளாகியதில் 22 படையினர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது. எதிர்த்திசையில் வந்த லொறி ஒன்றுடன் பஸ் மோதியதிலேயே விபத்து சம்பவித்துள்ளது. (ச-25,சி)

## நுரைச்சோலை மின்பிறப்பாக்கி மீளியக்கம்

கொழும்பு, ஏப். 23

புத்தாண்டுக் காலத்தில் குறைந்த மின் தேவை காரணமாக நிறுத்தப்பட்டிருந்த நுரைச்சோலை மின்நிலையத்தில் உள்ள மின்பிறப்பாக்கி நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை முதல் மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது என இலங்கை மின்சாரசபையின் ஊடகப் பேச்சாளர் தர்மிக விமலரத்ன தெரிவித்துள்ளார். தற்போதைய அதிகரித்த மின் தேவைக்கு ஏற்ப நுரைச்சோலை அனல் மின்நிலையத்தில் உள்ள மூன்று மின் பிறப்பாக்கிகளும் இயக்கப்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-25,சி)



## பொலிஸ் துறைக்கு 5,000 பேர் ஆட்சேர்ப்பு

கொழும்பு, ஏப். 23

இந்த ஆண்டில் இலங்கை பொலிஸ் திணைக்களத்துக்கு புதிதாக 5 ஆயிரம் பேரை இணைத்துக்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார். இவர்களில் 2 ஆயிரம் பேரை உடனடியாகவும் மீதமுள்ள 3ஆயிரம் பேரை டிசெம்பர் மாதத்திலும் சேர்த்துக்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. அத்துடன், இலங்கை பொலிஸாருக்கான தனி சம்பளக்கட்டமைப்பை உருவாக்குவதிலும் கவனம் செலுத்தப்படும் என்றும் அவர் கூறினார். (ச-சி)

நாளை

வியாழக்கிழமை -சித்திரை 11

24.04.2025

சுப நேரம் : 07.30 - 09.00

ராகுகாலம் : 01.30 - 03.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம்
24
01
1948



மறைவு
22
04
2025

### கணபதிப்பிள்ளை தெய்வேந்திரம்

இளவாலை முள்ளானையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை தெய்வேந்திரம் அவர்கள் 22.04.2025 நேற்று செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை நாகேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற முத்துச்சாமி பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற அன்னலெட்சுமியின் பாசமிகு கணவரும் ஆவார். உமாசுதன் (லண்டன்), தனேந்திரா (தொழிலுட்பவியலாளர் சங்கானை), மணிவண்ணன் (Tastraa (PVT) ltd) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் ஆவர். மஞ்சுளா கலைச்செல்வி, சுதர்சினி ஆகியோரின் மாமனாரும், அக்சிதா, சஞ்சயன், லாவான்யா, லகீர்தன், கவின், அபிஷேக், அக்சனா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற பரமேஸ்வரிமற்றும் செல்வரத்தினம் (கனடா), விக்கினாசா (கனடா), விநாயகமூர்த்தி (இளவாளை) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் இறுதிக்கிரியைகள் இடம்பெற்று, பூதவுடல் கோண்டாவில் கட்டையாளடி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் குடும்பத்தினர்
076 440 0816
077 978 9223

# ஈஸ்டர் தாக்குதல் விசாரணைகள் கடந்தகாலங்களில் மூடிமறைப்பு

## அமைச்சர் நளிந்த சுட்டிக்காட்டு

வவுனியா, ஏப்.23

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணையை மூடிமறைப்பதற்கே கடந்த காலங்களில் முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. தற்போதுதான் விசாரணை முறையாக இடம்பெறுகின்றது. அதனால்தான் கடந்தகாலங்களில் அரசாங்கத்தில் இருந்தவர்கள் கலக்கமடைய ஆரம்பித்துள்ளனர் என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போது எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணை குறித்து எதிரணியில் உள்ளவர்கள் ஏன் இப்படி குழப்பம் அடைந்துள்ளனர் என்பது தொடர்பாக சிந்திக்க வேண்டியுள்ளது.

தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்து ஆறு மாதங்கள்தான் ஆகின்றன. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் நடைபெற்று ஆறு வருடங்களாகின்றன. இந்நிலையில் கடந்த ஐந்தரை வருடங்களில், தாக்குதலை மூடிமறைப்பதற்கான முயற்சிகளே இடம்பெற்றன. தற்போதுதான் உண்மையாகவே விசாரணை நடக்கின்றது. எதிரணிகளின் கலக்கத்துக்கு என்ன காரணம் என்பது தெளிவாகின்றது- என்றார்.

(ச-44)

## மரண அறிவித்தல்



### அருட்சகோதரி புஸ்பம் ஞானப்பிரகாசம் தி.கு

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் யாழ். திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி புஸ்பும் ஞானப்பிரகாசம் தி.கு நேற்று முன்தினம் (21.04.2025) திங்கட்கிழமை இறைபதம் இணைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு 25.04.2025 அன்று வெள்ளிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு யாழ் புனித மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர், யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

121, பிரதான வீதி
யாழ்ப்பாணம்

தகவல்:
அருட்சகோதரி தியோவ்வின் குருஸ்
மாகாணத் தலைவி

## மரண அறிவித்தல்

தோற்றம்
25
03
1948



மறைவு
19
04
2025

### திரு முத்து தெய்வேந்திரம்

(ஓய்வு பெற்ற பொது முகாமையாளர், கணக்காளர்-யாழ் பலநோக்கு கூட்டுறவு சங்கம், ஆங்கில ஆசிரியர்)


நவாலியைப் பிறப்பிடமாகவும் ஆறுகால் மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு முத்து தெய்வேந்திரம் அவர்கள் கடந்த (19.04.2025) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்து-பார்வதி தம்பதிகளின் அன்பு மகனும் இராஜேஸ்வரி அவர்களின் அன்பு கணவரும் மாலினி, ஆரணி, நிஷாந், நிஷாளினி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் இராசமணி, தனலக்சுமி, செல்லம்மா, தங்கம்மா, ஞானவதி, காலஞ்சென்ற துரையம்மா, செல்லம்மா, தனலட்சுமி, பசுபதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் கலிஸ்டன். சுகிரான், அஜித்குமார், சவிதா ஆகியோரின் மாமனாரும் அர்ச்சயா, அக்ஷரன், ஆயுஷ்வன், ஜீனுசென், லோகித், அவனிஸ், தாக்சித்தஸ்வாந்த், தமிக்ஷா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (23.04.2025) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 24.03.2025 திங்கட்கிழமை அன்று இறைபதம் அடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்

### அமரர் செல்லையா கிட்னேஸ்வரன்

இறைதாளில் இணைந்திட்டார் இணையும் சாந்தி
செப்பறிய சாவகச்சேரி தோன்றி
திருமிகவார் இல்வாழ்விற் செகத்திற் திளைத்தே
தப்பிதமில் மழலைகளைத் தாரிற் பெற்றே
தகையுமரு மக்களொடு பேரர் சூழ
ஒப்பரிய வாழ்வுதனை உலகிற் கண்டே
உற்றவரும் சுற்றவரும் உருகிக் கதற
இப்புவிவாழ் உயிர்களினை என்றும் காக்கும்
இறைதாளிற் சேர்ந்திட்டார் இணையும் சாந்தி
ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

எங்கள் குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (23.04.2025) புதன்கிழமை காலை 08.00 மணியளவில் நடைபெற்று ஆத்மசாந்திப் பிரார்த்தனை முற்பகல் 11.00 மணியளவில் எங்கள் குலவிளக்கின் இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் எங்கள் தெய்வத்தின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் ஆறுதல் தெரிவித்த அனைவருக்கும் நன்றிகளை தெரிவிப்பதோடு தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கற்குழி முதலாம் ஒழுங்கை,
தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.

(CS/30063) J-1

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் உளவுத்துறையாலேயே பல எம்.பி.க்களின் உயிர் தப்பியது

## சிவாஜிலிங்கம் தெரிவிப்பு



உரும்பிராய் ஞானவைரவர் சமூக அறக்கட்டளை அறப்பணியில் ஒரு பகுதியாக வெளிநாடுகளில் வசிக்கும் அன்பர்களின் நிதிப்பங்களிப்புடன் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கும் 230 குடும்பங்களுக்கு புதுவருட பிறப்பை முன்னிட்டு உலர் உணவுப் பொதிகள் வழங்கிவைக்கப்பட்டன.(ச-22,125)

யாழ்ப்பாணம், ஏப்.23

போர் நடந்த காலப்பகுதியில் பல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இருந்த உயிர் அச்சுறுத்தலை தமிழீழ விடுதலைப்புலிகளின் உளவுத்துறை கண்டறிந்து எச்சரித்ததால் இன்று பலர் உயிருடன் இருக்கின்றோம் என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார். மாமனிதர் கிட்டினன் சிவநேசனின் 17ஆவது ஆண்டு நினைவேந்தலும், நினைவுப்பேருரை நிகழ்வும் நேற்றுமுன்தினம் நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெற்றன. அதில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழீழ விடுதலைப்புலிகளின் உளவுத்துறை 5 தடவைகள் துல்லியமாகத் தகவல்களை வழங்கி எச்சரித்ததால் எனது உயிர் காப்பற்றப்பட்டது.

2006ஆம் ஆண்டு நீங்கள் கைது செய்யப்படப்போகிறீர்கள், உடனடியாக நாட்டை விட்டு வெளியேறுங்கள் என்று தகவல் தரப்பட்டது. அந்தக் காலப்பகுதியில் எனது காவலர்கள், கட்சி உறுப்பினர்கள் கைதுசெய்யப்பட்டனர். நான் சென்னையில் இருந்து திரும்பியபோது புலித்தேவனிடம் இருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. உங்களில் சிலரைக் கிளைமோர் வைத்துக் கொல்லத் தீர்மானித்துள்ளனர். அதனால் நீங்கள் தற்போதுநாட்டுக்கு வரத் தேவையில்லை என்பது தலைவரின் உத்தரவு என்று அவர் தெரிவித்தார்.

இவ்வாறான எச்சரிக்கைகள் மாமனிதர் சிவநேசன் ஐயாவுக்கு வழங்கப்பட்டிருந்தபோதும், அவர் தனது உயிரைச் துச்சமென மதித்து தாயகத்தில் மக்களுக்காகப் பணியாற்றினார். மகாசிவராத்திரி நாள் ஒன்றில் மாங்குளத்தில் இராணுவத்தின் ஆழ ஊடுருவும் அணி நடத்திய கண்ணிவெடித் தாக்குதலில் அவர் கொல்லப்பட்டார்- என்றார். (எ-66)

# ஆட்டம் காண்கின்றது தேசிய மக்கள் சக்தி!

## ராஜித தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.23

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்டம் காண ஆரம்பித்துள்ளது. அந்தக் கட்சியின் ஆட்சி தொடர்ந்தால் இலங்கை சோமாலியாவாக மாறக்கூடும் என்று முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன எச்சரிக்கை விடுத்துள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியின் பரப்புரைக் கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வருட இறுதியாகும்போது தற்போதைய அரசாங்கத்தால் தாக்குப்பிடிக்கமுடியாத நிலை ஏற்படும்.

4 வருடங்களில் தேர்தலுக்கு செல்வார்களாம். அது பொய். தேசிய மக்கள் சக்தி ஆட்சி 4 ஆண்டுகளுக்கு நீடித்தால் சூடான் மற்றும் சோமாலியாவின் நிலையே இலங்கைக்கு ஏற்படும். தேர்தலுக்கு முன்னரே அரசாங்கம் மாறக்கூடும். ரணில் விக்கிரமசிங்கவால் மட்டுமே நாட்டை மீட்கமுடியும் - என்றார். (எ-44)

**'நிதி விடுவிப்பைக் காட்டி அடிபணியவைக்கிறது அரசு'** எனும் தலைப்பில் வெளியான செய்தியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் முதல்வர் வேட்பாளர் வை.கிருபாகரன் எனத் தவறாகப் பிரசுரமாகிவிட்டது. வை.கிருபாகரன் என்பவர் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் துணை முதல்வர் வேட்பாளர் ஆவார்.

தவறுக்கு வருந்துகிறோம். (ஆ-ர்)

# விசுவாவசு தமிழ்ப் புத்தாண்டுப் பலன்கள் - 2025




**தனுசு ராசிக்காரர்களுக்கு,**

முன்வைத்த காலை பின்வைக்காத குணம்கொண்ட நீங்கள், திடீர் முடிவுகளால் எதிரிகளை திக்குமுக்காட வைப்பீர்கள் மே மாதம் 14ஆம் திகதி முதல் சகட குரு விலகி, சாதனைக் குருவாக பலன் தரப்போகிறார்.

குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும். சொந்தத் தொழிலில் இலாபம் அதிகரிக்கும். உங்களுக்குள் மூன்றாம் நபர் தலையீட்டை அனுமதிக்கவேண்டாம். பிள்ளைகளின் எதிர்காலம் குறித்து முக்கியமான முடிவுகளை எடுப்பீர்கள். திடீர் பணவரவு உண்டு.

சொந்தமாக வீடு வாங்குவீர்கள் அல்லது கட்டி குடிபுகுவீர்கள். அதேசமயம் அரசு அனுமதி பெறாமல் வீடு கட்டத் தொடங்கவேண்டாம். சொத்துப் பிரச்சினைகளை சுமுகமாகப் பேசித்தீர்ப்பீர்கள். மூத்த சகோதரர்களால் ஆதாயம் உண்டு. விலையுயர்ந்த ஆபரணம், அணிகலன்களை வாங்குவீர்கள்.

தாய்வழி சொத்துகளில் சிக்கல்கள் வரக்கூடும். நீண்டநாள்களாக எதிர்பார்த்து காத்திருந்த விசா இப்போது கிடைத்து, அயல்நாட்டுப் பயணம் சாதகமாக அமையும். பூர்வீக வீட்டைச் சீரமைத்து விரிவுபடுத்திக் கட்டுவீர்கள். பணி ஓய்வு பெற்ற பிறகு சொந்த ஊருக்குச் செல்லத் திட்டமிடுவீர்கள்.

மனைவிவழி உறவினர்களிடம் அனுசரணையாக நடந்துகொள்ளவும். விருந்தினர் வருகையால் வீடு களைகட்டும். தந்தைவழியில் இருந்த பகை நீங்கும். குழந்தைகளின் நடவடிக்கைகளில் ஒரு கண் இருக்கட்டும். அவர்களின் நட்பு வட்டத்தையும் கவனியுங்கள். மே 18ஆம் திகதி நிகழவுள்ள ராகு கேது பெயர்ச்சியின்படி எதிலும் வெற்றி உண்டாகும். கடன் தொல்லைகள் அடியோடு விலை

கும். குடும்பத்தில் உங்கள் பேச்சுக்கு மதிப்பு, மரியாதை கூடும். கௌரவச் செலவுகள் அதிகரிக்கும். பணப்புழக்கம் அதிகரிக்கும். நிலுவையிலிருந்த வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். மனதுக்கு உற்சாகம் அளிக்கும். அக்கம் பக்கம் வீட்டாருடன் அவ்வப்போது கருத்துமோதல்கள் இருந்த நிலை மாறி, இனி உங்களிடம் வலிய வந்து பேசுவார்கள். அவர்களின் தேவையறிந்து உதவி செய்வீர்கள். எல்லோரிடமும் சுமுக நட்பு வைத்துக்கொள்வது நல்லது. அவர்கள்தான் முதலில் நமக்கு உதவிக்கு வருவார்கள். மனஅழுத்தம், உடல் சோர்வு நீங்கும். உடல் எடையை குறைக்க பட்டினி கிடக்காமல் சின்னச் சின்ன உடற்பயிற்சியை மேற்கொண்டாலே போதும். போட்டிகளில் வெற்றி உண்டு. உறவினர்கள் மத்தியில் மதிப்பு, மரியாதை கூடும்.

## வளர்ப்பாதை உருவாகும்

எதிலும் கவனமாக இருக்கவும். முன்பின் தெரியாத நபர்களிடம் பழகவேண்டாம். சமூக வலைதளங்களைப் பயன்படுத்தும்போது எச்சரிக்கையாக இருக்கவும். தேவையில்லாத விஷயங்களை அவற்றில் பகிர்ந்துகொள்ளவேண்டாம். பெற்றோரின் பேச்சைக்கேட்டு செயற்படுங்கள்.

உத்தியோகத்தில் எதிர்பார்த்த பதவி உயர்வு, சலுகைகள் கிடைக்கும். இழந்த மதிப்பை மீண்டும் பெறுவீர்கள். சூழ்ச்சிகளைத் தாண்டி முன்னேறுவீர்கள். புதிய சலுகைகள் உங்கள் இருக்கை தேடி வரும்.

**மொத்தத்தில் இந்தத் தமிழ்ப் புத்தாண்டு, உங்களை வளர்ச்சிப் பாதையில் அழைத்துச்செல்வதாக அமையும்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நாய் குறுக்கே பாய்ந்ததில்
# மோ.சைக்கிள் விபத்து; தம்பதியர் ஸ்தலத்தில் பலி

கொழும்பு, ஏப். 23

கலவெல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அம்பேபுஸ்ஸ திருகோணாமலை வீதியில் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று, நாய் குறுக்கே பாய்ந்ததால் விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த 32 வயதான கணவனும், 21 வயதான அவரது மனைவியுமே சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளனர். அத்துடன் அவர்களுடன் பயணித்த 3 வயது மகன் காயங்களுடன் உயிர்தப்பிய நிலையில், தம்புள்ள மருத்துவனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். (ச-25,சி)

**உடனடி வேலைவாய்ப்பு**

பிரபல்யமான கம்பனிக்கு வடமாகாணத்தில் கிளை முகாமையாளர்கள். அலுவலக உத்தியோகத்தர்கள் உடனடியாக தேவை

தொடர்பு: 074 183 5645

**காணி விற்பனைக்கு**

மிருசுவில் மற்றும் அல்லாரை தெற்கில் மிருசுவில் A9 வீதிக்கு அருகாமையில் 5பரப்பும் கச்சாய் வீதி அல்லாரை தெற்கில் 2.5 பரப்பும் காணிகள் விற்பனைக்கு உண்டு. வாங்க ஆர்வமுள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும். (CR/0067) S-1

whatsapp/ Viber 0033 770 012099

## மரண அறிவித்தல்

தோற்றம் 24 . 12 . 1936



மறைவு 22 . 04 . 2025

### அருள்நாயகி சண்முகரத்தினம்
(இளைப்பாறிய மகாஜன கல்லூரி ஆசிரியை)

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் கொல்லங்கலட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட அருள்நாயகி சண்முகரத்தினம் அவர்கள் நேற்று (22.04.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரா.சண்முகரத்தினம் (இளைப்பாறிய புத்தூர் சோமஸ்கந்த அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வைத்திலிங்கம்-இராசலட்சுமி தம்பதியின் ஏக புத்திரியும் காலஞ்சென்ற இராசரத்தினம்-பத்மாவதி தம்பதியின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற திருமதி மகேஸ்வரி காசிநாதர். குகதாசன். சிவதாசன் ஆகியோரின் உடன் பிறவாச்சகோதரியும் ஸ்ரீதரன். சசிதரன் ஆகியோரின் சிறிய தாயாரும் மீரா. ஜெயபாவனி. தேவகி. தபோதினி ஆகியோரின் மாமியாரும். யாழினி. ஜோதினி. குழகன். பார்த்தீபன். பிரதீபா. சோபிதா. வாயி. கஜப்பிரியா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (22.04.2025) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கீரிமலை செம்பொன் வாய்க்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ் அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
ஜெயதாசன்
சசிதரன்
077 959 9370

## மரண அறிவித்தல்



### தர்மகுலசிங்கம் தவமணிதேவி

கைதடி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தர்மகுலசிங்கம் தவமணிதேவி அவர்கள் நேற்று (22.04.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி-சின்னத்தங்கம் தம்பதியின் அன்பு மகளும் காலஞ்சென்ற நடராஜா-இலட்சுமி தம்பதியின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற தர்மகுலசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் ஜீவாஞ்சனா. ஜீவகரன் (கொமர்ஷல் வங்கி பாதுகாப்பு உத்தியோகத்தர்). காலஞ்சென்ற ஜீவகேசன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம். சின்னம்மா. நவரத்தினம் மற்றும் செல்வராசா. சபாபதிப்பிள்ளை. செல்வநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சந்திரகுமார். நளினி ஆகியோரின் பாசமிகு மாமியாரம் பிரணவி. பிரவின். வர்ணிகா. கவீனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான சரஸ்வதி. தவமணிதேவி. சறோஜாதேவி மற்றும் ஜெயலட்சுமி. ஜெகதம்பாள் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.04.2025) புதன்கிழமை காலை 06.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காலை 08.00 மணியளவில் ஊற்றல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
ஜீவகரன்- 077 604 2725

## மரண அறிவித்தல்

### வைத்தியலிங்கம் தம்பி சிவலிங்கம்
(பிரபல சட்டத்தரணி)



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைத்தியலிங்கம் தம்பி சிவலிங்கம் அவர்கள் கடந்த 18.04.2025 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்தியலிங்கம் தம்பி-தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான எஸ்.எஸ்.ஆறுமுகம்-இந்திராணி தம்பதியரின் அன்பு மருமகனும் நளாயினி அவர்களின் அன்புக் கணவரும், தீனவந்தனின் அன்புத் தந்தையும் தனாளினியின் பாசமிகு மாமனாரும் வசிஸ்ஸின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம், ரட்ணலிங்கம், கனேசலிங்கம், பஞ்சலிங்கம், மகாலிங்கம் மற்றும் ஓய்வு பெற்ற A.S.P.சுந்தரலிங்கம், தில்லை, ராஜேஸ்வரி, குமாரசாமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் தயாளினி, சுபாசினி, லோஜினி, முகுந்தா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக (23.04.2025) புதன்கிழமைகிழமை பிற்பகல் 01.00 மணியளவில் அவரது இல்லத்தில் வைக்கப்பட்டு அன்னாரின் இறுதிக்கிரியைகள் 24.04.2025 வியாழக்கிழமை காலை 08.30 மணியளவில் ஆரம்பமாகி பின் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தோற்றம் 08.02.1939 மறைவு 18.04.2025

16/4 சீனியர் லேன்,
கலட்டி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 664 6963

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதன் பொய்கை
23.04.2025
புதன்கிழமை

தவறவிட்ட வாய்ப்பைவிட அதிக மதிப்புடைய விஷயம் வேறு எதுவுமில்லை.

- எச். ஜாக்சன்



சூழல் வெப்பநிலை அதிகரிக்கும்போது அதனைச் சமநிலைப்படுத்தும் விதமாக உடல் பல்வேறு தொழிற்பாடுகளை மேற்கொள்கின்றது. எனினும் உடலின் தாங்கு திறன் செயற்படுதிறனை மீறி சூழல் வெப்பமானது உடலில் பல உபாதைகளை ஏற்படுத்துகின்றது.

# வெப்ப காலத்திலான ஆரோக்கியம்!

**வைத்தியர் தி.சுதர்மன்**
வலிகாமம் வடக்கு உத்தியோகத்தர்
வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களம்

பொதுவாக தமிழ் மாதங்களான சித்திரை, வைகாசி மாதங்கள் கொண்ட காலப்பகுதி இளவேனிற் காலம் அல்லது வசந்தகாலம் எனப்படுகின்றது. ஆனால் பூகோள மாறுபாடுகளால் இன்று இந்தக் காலப்பகுதியில் அதீத வெப்பம் எம்மை வாட்டுகின்றது.

அதிலும் சூழல் வெப்பநிலை 36 செல்சியஸாக உள்ளபோது எமது உடல் உணரும் வெப்பநிலை சராசரியாக 42 செல்சியஸ் ஆகக் காணப்படுவதாக துறைசார் வல்லுநர்கள் கூறுகின்றனர்.

சூழல் வெப்பநிலை அதிகரிக்கும்போது அதனைச் சமநிலைப்படுத்தும் விதமாக உடல் பல்வேறு தொழிற்பாடுகளை மேற்கொள்கின்றது. எனினும் உடலின் தாங்குதிறன் செயற்படுதிறனை மீறி சூழல் வெப்பமானது உடலில் பல உபாதைகளை ஏற்படுத்துகின்றது.

இந்த உபாதைகளில் இருந்து எம்மைப் பாதுகாத்திட நாம் எமது வாழ்வியல் நடைமுறைகளில் சில மாற்றங்களைச் செய்யவேண்டியுள்ளது. குறிப்பாக உணவுப் பழக்கங்களில் மாற்றங்களை ஏற்படுத்தவேண்டும்.

**வெப்பகால ஆரோக்கியத்தைப் பேணும் வழிமுறைகள்**

1. தேவையற்று வெயிலில் / வெளியில் திரிவதை இயலுமானவரை தவிர்த்துக்கொள்ளல். குறிப்பாக மூத்தோர்கள், அதி இரத்த அழுத்தம், நீரிழிவு, வலிப்பு, மூல வருத்தம் போன்ற தொற்றாநோய் உடையவர்கள் வெளியில் செல்வதில் அவதானம் தேவை. சுவாசத்தொற்று நோய்கள், அம்மை போன்ற தொற்றுநோய்கள், தோல் நோய்கள் அதிகமாக ஏற்பட வாய்ப்புகள் அதிகம். எனவே இவற்றுக்கான ஏதுக்கள் உள்ளவர்கள் அவதானமாக இருத்தல் வேண்டும். கிரந்தி (ஒவ்வாமை) உணவுகளைத் தவிர்த்தல் நன்று.
2. வெளியில் செல்லும்போது கண்களுக்கு கறுத்தக் கண்ணாடி அணிந்துசெல்லல், தளர்வான பருத்தியிலான உடைகளை அணிதல், கறுப்பு நிற உடைகளைத் தவிர்த்தல், தொப்பி, குடைகளைப் பாவித்தல் என்பன அவசியமாகின்றன.
3. காலை மாலை குளித்தல் அவசியமாகின்றது. கிழமையில் இரண்டுதரமாவது எண்ணெய் தலையில் வைத்து உடலில் பூசி தலைமுழுகுதல் அவசியம்.
4. உடலில் வியர்வை அதிகம் ஏற்படுவதால் உடலில் இருந்து உப்புக்கள் இழப்பு ஏற்பட வாய்ப்புகள் அதிகம் உள்ளதால் அதி இரத்த அழுத்தம் உள்ளவர்கள் அதற்கான சிகிச்சை பெறுபவர்கள் இரத்த அழுத்தம் தொடர்பில் அவதானம் தேவை.
5. குளிர்சாதனப்பெட்டியில் உள்ள நீர், குளிர்பானங்களைத் தவிர்த்தல் வேண்டும்.
6. இயற்கையான நீர் அல்லது மண்பானையில் வைத்திருக்கும் நீரினை அருந்துதல் வேண்டும். நீர் அருந்தும்போது தாகம் எடுக்கும்முன் அருந்துதல் வேண்டும். அடிக்கடி குறைந்தது 30 நிமிடங்களுக்கு ஒரு முறையாவது நீரினை சிறிது சிறிதாக அருந்துதல்வேண்டும் அதிக வியர்வை ஏற்படுவதால் வெட்டிவேர், சந்தனம் ஊறவைத்த நீர் குடிப்பது சிறந்தது.
7. பொதுவாக 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் அவர்களது நிறையினை 30 ஆல் பிரித்துவரும் பெறுமானம் அளவு நீர் (லீற்றரில்) அருந்துதல் வேண்டும். ஆனால் இக்காலத்தில் அதைவிட தேவைக்கு ஏற்றவாறு அதிகமாக நீர் அருந்துதல் நன்று
8. சிறுவர்கள் கட்டாயமாக குறைந்தது 15 வயதுடையவர்கள் ஒரு லீற்றர் நீர், 6-10 வயதுடையவர்கள் 1.5 லீற்றர் நீர், 11-18 வயதுடையவர்கள் 2 லீற்றர் நீர் அருந்துதல் வேண்டும். மைதான விளையாட்டுகளில், உடற்பயிற்சியில் ஈடுபடுவோர் தேவைக்குஏற்ப அதிக அளவு நீர் அருந்தவேண்டும்.
9. இயற்கையான கற்றாளைப் பானம், நன்னாரி பானம், வத்தகப்பழப் பானம், நுங்கு, நெல்லிக் காய்ப்பானம், நாரைத்தோடைப்பானம், இளநீர், எலுமிச்சம் பழ பானம், மோர், பழஞ்சோற்றுக்கஞ்சி போன்றவற்றைப் பருகுதல் நன்று.
10. ஊரில் கிடைக்கும் இயற்கையான பருவகாலப் பழங்களான விழாம்பழம், நெல்லி, வத்தகப்பழம், வில்வம் பழம், வாழைப்பழம், பப்பாசிப்பழம் போன்றவற்றை உண்ணுதல் அவசியம்.
11. கறிவகைகளில் கீரை வகை, வெண்டிக்காய், புடலங்காய், கருணைக்கிழங்கு, நீற்றுப்பூசணி, கரட், பீற்றூட் போன்றவற்றைப் அதிகம் பயன்படுத்துவதுடன் மிளகாய்த் தூள், புளி போன்றவற்றைக் குறைத்து பயன்படுத்துதல் நன்று.
12. மதிய உணவுடன் தயிர் சேர்த்தல் நன்று
13. பருப்பு வகைகளில் பயறு வெப்பகாலத்துக்கு உகந்தது.
14. சூடான, செயற்கையான மென்பானங்களைத் தவிர்த்தல்வேண்டும்.
15. மூடிய அறைகளுக்குள் இருத்தல் தூங்குதலைத் தவிர்த்தல்வேண்டும்.
16. புகைப்பிடித்தல், மதுபாவனையைத் தவிர்த்தல், அதிக போன் பாவனையைத் தவிர்த்தல்வேண்டும்.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org










# டில்லி கலை இலக்கியப் பேரவையின் தமிழ் கலை இலக்கிய இரண்டாவது மாநாடு

டில்லி கலை இலக்கியப்பேரவை மற்றும் இந்தியத் துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில், தமிழ் கலை இலக்கிய இரண்டாவது மாநாடு கடந்த 13ஆம் திகதி சிறப்பாக நடைபெற்றது.



யாழ்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில், இந்தியத் துணைத்தூதரக தலைமை நிர்வாக அதிகாரி ரம்யாவின் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன.

முனைவர் பாரதி கிருஷ்ணகுமார் மற்றும் சரண்யா ஜெயக்குமார் ஆகியோரின் சிறப்புரைகள் மாநாட்டுக்கு அணிசேர்த்தன.

அத்துடன், முனைவர் இரா. மாதுவின் தலைமையில் வழக்காடு மன்றம் இடம் பெற்றது. தொடர்ந்து பட்டிமன்றம், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர்களின் காத்தவராயன் கூத்து, 'தேன்மதுரகீதம்' நிரோஜனின் தமிழிசை நிகழ்ச்சி, யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்களின் நடனங்கள் உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகள் என்பனவும் இடம்பெற்றன.


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறீ சற்குணராஜா, இந்தியத் துணைத்தூதரக அதிகாரிகள், விரிவுரையாளர்கள், கல்விமான்கள், கலை இலக்கியச் செயற்பாட்டாளர்கள், தொழிலதிபர்கள் உள்ளிட்ட பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர். அதிதிகளுக்கும், மாணவர்களுக்கும் நினைவுப் பரிசில்கள் வழங்கப்பட்டதுடன், கௌரவிப்புக்களும் இடம்பெற்றன.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாப்பரசர் பிரான்சிஸ்



## வழக்கங்களைத் தகர்த்த சீர்திருத்தத் தலைவர்

கத்தோலிக்க மதத் தலைவரான பாப்பரசர் பிரான்சிஸ் நேற்றுமுன்தினம் காலமானார். ஒரு கத்தோலிக்கத் தலைவர் என்பதற்கு அப்பால், பாப்பரசர் பிரான்ஸிஸால் ஆற்றப்பட்ட பணிகள் காலத்தால் நிலைக்கக்கூடியன.

ஜோர்ஜ் பெர்கோகிலோ என்ற இயற்பெயர் கொண்ட பாப்பரசர் பிரான்சிஸ், அப்பதவியில் அமர்ந்த முதல் இலத்தீன் அமெரிக்கர் என்ற பெருமையைக் கொண்டவர். 2013ஆம் ஆண்டு மார்ச் 13ஆம் திகதி 266ஆவது பாப்பரசராகப் பதவியேற்ற காலம்முதல் கத்தோலிக்கத் திருச்சபைக்கென தனியான வரலாற்றை அவர் எழுதத் தொடங்கினார். பல நூற்றாண்டுகள் பழமையான கோட்பாட்டை மாற்றியமைக்காமல், மிகவும் இரக்கமுள்ள கத்தோலிக்க திருச்சபையை உருவாக்கிய சீர்திருத்தத் தலைவராகப் பாப்பரசர் பிரான்சிஸ் வரலாற்றில் இடம்பிடிப்பார். மக்களின் பாப்பரசராக விளங்கியவரே பிரான்சிஸ். இவர் இந்தப் பெயரை தேர்ந்தெடுத்ததிலேயே அவர் தனது தனித்துவத்தை வெளிப்படுத்தினார். தனது செல்வத்தைத் துறந்து ஏழைகளுக்காக தனது வாழ்க்கையை அர்ப்பணித்த 13ஆம் நூற்றாண்டின் புனித பிரான்சிஸ் அசிசியின் நினைவாக, பிரான்சிஸ் என்ற பெயரைப் பெற்ற முதல் பாப்பரசர் இவராவார்.

### திருச்சபைக்குள் எதிர்ப்பு

திருச்சபைக்குள் பாரம்பரியவாதிகளிடம் இருந்து கடுமையான எதிர்ப்புகளை எதிர்கொண்ட போதிலும், விசுவாசிகளின் நேசத்தை அதிக அளவில் பெற்ற சீர்திருத்தத் தலைவராக விளங்கியவர்



பாப்பரசர் பிரான்சிஸ். பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கியவர்கள், சொந்த நாட்டைவிட்டு வெளியேறி வேறுநாட்டில் குடியேறியவர்கள், காலநிலை மாற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் என விளிம்பு நிலை மக்களைப் பாதுகாப்பதில் உறுதியாக இருந்தவர் பாப்பரசர் பிரான்சிஸ். மனிதர்கள் எதிர்கொள்ளும் இத்தகைய பிரச்சினைகளுக்கு சக மனிதர்களே காரணம் என எச்சரித்தவர் அவர்.

பாதிரியார்களால் பாலியல் துன்புறுத்தல்களை எதிர்கொண்டவர்களுக்கு அவர் ஆதரவாக நின்றார். எனினும், அத்தகைய பாதிரியார்களுக்கு எதிரான நடவடிக்கைகள் மெதுவாக நடப்பதாக எழுந்த குற்றச்சாட்டையும் அவர் எதிர்கொண்டார்.

### எளிமையான வாழ்க்கை

சாதாரண அங்கிகளை அணிவதாகட்டும், ஆடம்பரமான அரண்மனைகளைத் தவிர்ப்பதாகட்டும், தனக்கு வரும் தொலைபேசி அழைப்புகளை தானே எடுப்பதாகட்டும், கணவரை இழந்த பெண்கள், கைதிகள் போன்றோருக்கு ஆறுதல் தெரிவிப்பதாகட்டும் என அவர் என்றுமே எளிமையை விரும்புபவராகவும், எளிய மக்களோடு நிற்பவராகவும் இருந்துள்ளார். சமூக ஊடகங்கள் முதல் ஆபாசம் வரையிலான பிரச்சினைகள் குறித்து இளைஞர்களுடன் உரையாடியவர் பாப்பரசர் பிரான்சிஸ். பாப்பரசருக்காக கத்தோலிக்கத் திருச்சபையால் வழங்கப்படும் 32 ஆயிரம் டொலர்கள் ஊதியத்தை அவர் புறக்கணித்தார்.

வத்திக்கானில் தனது முதல் ஈஸ்டருக்கு முன்பு, உரோம் சிறையில் கைதிகளின் பாதங்களை அவர் கழுவி முத்தமிட்டார். பாப்பரசர் பிரான்சிஸ் தனது முதல் வெளிநாட்டுப் பயணத்துக்காக, இத்தாலிய தீவான லம்பேடுசாவைத் தேர்ந்தெடுத்தார். இதற்குக் காரணம், ஐரோப்பாவுக்குள் நுழைய விரும்பும் பல்லாயிரக்கணக்கான புலம்பெயர்ந்தோருக்கு அந்தத் தீவுதான் நுழைவு வாயிலாக இருந்தது. உலகின் அலட்சியத்தையும் அதன் விளைவுகளையும் உணர்த்தவே அவர் இந்தத் தீவுக்குச் சென்றார்.

**தனது செல்வத்தைத் துறந்து ஏழைகளுக்காக தனது வாழ்க்கையை அர்ப்பணித்த 13ஆம் நூற்றாண்டின் புனித பிரான்சிஸ் அசிசியின் நினைவாக, பிரான்சிஸ் என்ற பெயரைப் பெற்ற முதல் பாப்பரசர் இவராவார்.**

### ட்ரம்ப்புக்குக் கண்டனம்

அமெரிக்க அதிபர் ட்ரம்ப்பின் முதலாவது பதவிக்காலத்தில் மெக்சிகோவுக்கு எதிராக எல்லைச்சுவரைக் கட்ட அவர் திட்டமிட்டார். இது கிறிஸ்தவத்துக்கு எதிரானது என்று கண்டனம் தெரிவித்தவர் பாப்பரசர் பிரான்சிஸ். மேலும், அமெரிக்காவுக்கும் கியூபாவுக்கும் இடையில் வரலாற்று நல்லிணக்கத்தை எளிதாக்க உதவினார். 2018ஆம் ஆண்டு ஆயர்களை நியமிப்பது தொடர்பான வரலாற்றுச் சிறப்புமிக்க ஒப்பந்தம் மூலம் சீனாவுடனான உறவுகளை மேம்படுத்த அவர் முயன்றார்.

கத்தோலிக்கப் படிநிலையின் முக்கிய நீரோட்டத்தில் ஒரு புதிய வாழ்க்கையைத் தொடங்க அவர் வழிவகுத்தார். முதலில் ஆர்ஜென்டினாவின் பியூனஸ் அயர்ஸில் 'சேரிகளின் ஆயராகவும்', பின்னர் பிஷப்களின் பிம்பத்தை உடைக்கும் பாப்பரசராகவும் தன்னை நிறுவியவர் பாப்பரசர் பிரான்சிஸ்.

2021ஆம் ஆண்டில் அவருக்கு பெருங்குடல் அறுவைச் சிகிச்சை நடந்தது. ஜூன் 2023ஆம் ஆண்டில் குடலிறக்கம், மூச்சுக்குழாய் அழற்சி, முழங்கால் வலி ஆகியவற்றால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றார். இதனால் அவர் சக்கர நாற்காலியைப் பயன்படுத்தவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இரண்டு நுரையீரல்களிலும் உள்ள மூச்சுக்குழாய்களில் ஏற்பட்ட அழற்சி காரணமாக ஒரு மாதத்துக்கும் மேலாக அவர் மருத்துவமனையில் சிகிச்சைபெறவேண்டியேற்பட்டது.

பாப்பரசர் பிரான்சிஸ் தனது பதவியை ராஜினாமா செய்வார் என மிக நீண்ட காலமாக ஊகங்கள் வெளிவந்தன. எனினும், அதனை திட்டவட்டமாக மறுத்தவர் போப் பிரான்சிஸ். பாப்பரசர் இராஜினாமா செய்வது 'சாதாரண விஷயமாக' மாறக்கூடாது என்பதில் அவர் உறுதியாக இருந்தார். இவ்வாறாக, ஓர் ஒப்பற்ற மதத் தலைவராகவும், சீர்திருத்தவாதியாகவும் இருந்த பாப்பரசர் நேற்றுமுன்தினம் இவ்வுலகைவிட்டுப் பிரிந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓட்டிச நிலையில் பேச்சு மொழியியல்

## பெற்றோர் அறியவேண்டியவை





**சிவநேசன் தட்சாயினி**

*பேச்சு மொழியியல் சிகிச்சையாளர்*

ஓட்டிசம் என்பது ஒரு நரம்பியல் வளர்ச்சிக் கோளாறாகும். இது பெரும்பாலும் குழந்தைகளின் சமூகப் பரிமாற்றம், தொடர்புகொள்ளும் திறன் மற்றும் நடத்தை ஆகியவற்றைப் பாதிக்கக்கூடியது. குழந்தைகளின் வளர்ச்சியில் பேச்சு, மொழித்திறன், சமூக ஒழுங்கு போன்றவை பாதிக்கப்படலாம். ஓட்டிசத்தின் தாக்கம் குழந்தை ஒவ்வொன்றுக்கும் மாறுபடும். எனவே இது ஒரு 'ஸ்பெக்ட்ரம்' கோளாறு என அழைக்கப்படுகிறது.

ஓட்டிசத்தின் அறிகுறிகளை நோக்கினால், முதலில் ஓட்டிசத்தின் ஆரம்பகால அறிகுறிகளைப் பெற்றோர் கவனிக்கவேண்டும். அவையாவன, பெயரை அழைத்தால் திரும்பிப் பார்ப்பதில்லை, கண் பார்வை குறைவாக இருப்பது, பேசுவதில் தாமதம் அல்லது முழுமையாகப் பேச இயலாத நிலை, ஒரே செயல்களை மீண்டும் மீண்டும் செய்வது, குறிப்பிட்ட பொருள்களிடத்தில் அதிக ஈடுபாடு காட்டுவது, சமூக உறவுகளுக்கு அதிக ஆர்வமில்லாதிருப்பது,, ஒலிக்கு அதிகம் உணர்வூட்டப்படுதல் அல்லது அதற்குப் பதிலளிக்காமை, உணவு, உடை, சுற்றுச்சூழல் போன்றவற்றில் கடுமையான விருப்பம் அல்லது வெறுப்புக்காட்டுதல். இத்தகைய அறிகுறிகள் இருந்தால் பெற்றோர் உடனே ஒரு சிறப்பு குழந்தை மருத்துவரை அல்லது மனநல மருத்துவரை அணுகி பிள்ளைகளை மதிப்பீடு செய்யவேண்டும்.

### ஓட்டிசம் ஏன் ஏற்படுகிறது?

ஓட்டிசம் ஏற்படுவதற்கான காரணங்கள் இன்னும் முழுமையாக அறியப்படவில்லை. எனினும், சில முக்கியமான காரணிகள் உள்ளன. முன்னர் நடத்தப்பட்ட ஆய்வுகளின் முடிவில் ஓட்டிசம் ஏற்படுவதற்கான காரணங்களாக பின்வருவனவற்றை குறிப்பிடலாம். மரபியல், கர்ப்ப காலத்தில் தொற்றுகள், மூளையின் வளர்ச்சியில் ஏற்படும் மந்தம் போன்ற காரணங்களால் ஓட்டிசம் ஏற்படலாம்.

### ஓட்டிசத்தில் பேச்சு மொழியியல்

ஓட்டிசம் நிலைமைக்கு எதிரான சிகிச்சையில், பேச்சுமொழிச் சிகிச்சை நிபுணர்களின் பங்களிப்பு என்ன என்பதை நோக்குவோம். ஓட்டிசம் உள்ள குழந்தைகளுக்கு பேச்சு மொழிச் சிகிச்சை மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இது குழந்தைகளின் மொழித்திறன் மற்றும் தொடர்புகொள்ளும் திறனை மேம்படுத்த உதவும்.

**மொழி மற்றும் பேச்சுத்திறன் வளர்ச்சி** - ஒரு குழந்தை வார்த்தைகளைக் கூறவில்லை அல்லது கூறச் சிரமப்படுகிறது என்றால் அதற்குரிய பயிற்சிகளைச் செய்யவைத்தல்.

**குழந்தைகளின் அடிப்படை வளர்ச்சித்திறன்களை சரிசெய்தல்** - பெயருக்கு அசைவு கொடுத்தல், கண் தொடர்பு, சத்தங்களை எழுப்புதல், இணைந்து குழுக்களுடன் செயற்படவைத்தல்.

**சமூக ஊடகத்திறன் வளர்ச்சி**- நண்பர்களோடு, பெற்றோரோடு தொடர்புகொள்வதை வசதியாக்குதல்.

**விளையாட்டுத் திறன் மேம்பாடு** - நடைமுறையில் செயற்பட உதவும் விளையாட்டுகளைப் பயிற்றுவித்தல்.

**மனநிலைச் சீராக்கம்** - குழந்தைகளுக்கு உணர்ச்சிநிலையைச் சமப்படுத்த உதவுதல்.

**ஏ.ஏ.சி .சாதனங்கள்** - பேசமுடியாத குழந்தைகளுக்கு பார்ப்பதன் மூலம் தமது தொடர்பாடலை மேற்கொள்ளப் பயிற்றுவித்தல்.

**மனப்பக்குவம் வளர்த்தல்** - குழந்தைகளுக்கு தினசரி வாழ்வியல் திறன்களை கதைகள், பாடல்கள் மூலம் கற்றுக்கொடுத்து தன்னம்பிக்கை வளர்த்தல்.

**செயற்பாட்டுப் பயிற்சிகள்** - கையால் செய்யும் செயல்கள், காகித வேலை, வரைவியல் போன்றவற்றின் மூலம் நுண்ணறிவுத்திறனை மேம்படுத்துதல்.

**அனுபவம் சார்ந்த கற்றல்** - குழந்தைகள் விளையாடும்போது அவர்களுடன் உரையாடி, வாழ்க்கைத்திறன்களை மேம்படுத்தும் கருத்துகளைக் கூறுதல்.

உணவு மற்றும் உணவு விழுங்குதலில் ஏற்படும் பிரச்சினைகளை இனங்கண்டு சிகிச்சை வழங்குதல்.



### பெற்றோர் செய்யவேண்டியவை

பெற்றோர் இந்தக் குழந்தைகளுக்கு செய்யவேண்டியவை யாதெனில், குழந்தையின் வளர்ச்சியைக் கண்காணிக்கவேண்டும், தினசரி பேச்சுப் பயிற்சிகளைச்செய்ய ஊக்குவிக்கவேண்டும், குழந்தையின் ஆர்வத்தைப் புரிந்துகொண்டு, அதற்கேற்ப பயிற்சிகளைக் கொடுக்கவேண்டும், ஒரு பேச்சு மொழியியலாளர் அல்லது குழந்தைகள் உளவியல் நிபுணரை அணுகவேண்டும், குழந்தைகளுடன் அதிகம் பேசவேண்டும், உடல் மற்றும் மனஅழுத்தத்தைக் குறைக்கும் விளையாட்டுகளை நடைமுறைப்படுத்தவேண்டும், சிகிச்சை முறைகளைத் தொடர்ச்சியாகப் பின்பற்றவேண்டும். பெற்றோர்கள் விழிப்புணர்வுடன் இருந்து, தகுந்த முறையில் உதவினால், குழந்தைகளின் வளர்ச்சியில் நல்ல முன்னேற்றத்தைக் காணக்கூடியதாக இருக்கும்.

பேச்சு மொழியியலாளர் வழியாக, குழந்தைகளின் சமூக மற்றும் மொழித்திறனை மேம்படுத்தமுடியும். தொழில்நுட்ப மற்றும் புதிய சிகிச்சை முறைகள் வளர்ந்துவரும் நிலையில், பெற்றோர்கள் கூடுதல் ஆதரவுடன் செயற்பட்டால், குழந்தைகளின் வாழ்க்கையில் வெளிச்சம் கொண்டுவரமுடியும்! ஒவ்வொரு குழந்தையும் தனித்துவமானது என்பதால், அவர்களின் தேவைகளுக்கேற்ப சிறப்புக் கவனம் வழங்குவது மிக முக்கியம்.

ஓட்டிசம் உள்ளவர்களுக்கு பேச்சு மொழியியலாளர்கள் ஒரு கருவியாகச் செயற்படுகின்றனர். சிறந்த சிகிச்சை முறைகள் மற்றும் நவீன தொழில்நுட்பம் இணைந்து, இந்நபர்களின் வாழ்க்கையை மேம்படுத்த உதவுகிறது. பேச்சு மொழியியலாளர் சிகிச்சை மூலம், அவர்கள் நம்பிக்கையுடன், சமூகத்தில் இடம்பிடித்து, சிறப்பான வாழ்க்கை வாழ வழிவகை செய்யலாம். இந்தநிலையில், பெற்றோர் ஆசிரியர்கள், சமூகத்தினருக்கு பேச்சு மொழியியலாளர் சிகிச்சையின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வுவை வழங்குவது அவசியம். பேச்சு மொழியியலாளர் சிகிச்சை வழியாக, ஓட்டிசம் உள்ளவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் முழுமையான திறமையை வெளிப்படுத்தி, சிறந்த எதிர்காலத்தை உருவாக்கமுடியும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
07 . 09 . 1953



மறைவு
22 . 04 . 2025

## இரத்தினம் மனோகரன்

கோப்பாய் பிரதேசசெயலக முன் வீதியை வசிப்பிடமாக கொண்ட இரத்தினம் மனோகரன் அவர்கள் நேற்று (22.04.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம்-அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் அருள் மொழியின் (லைலா) அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.04.2025) புதன்கிழமை அவரது இல்லத்தில் மதியம் 01.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 03.00 மணியளவில் கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**பிரதேச செயலக முன்வீதி,**
**கோப்பாய்.**

**தகவல்:**
**அருள்மொழி (மனைவி-லைலா)**

# ஆதனஉரிமை பெயர்மாற்ற அறிவித்தல்

வலிகாமம் வடக்குபிரதேசசபை:-மல்லாகம் உப அலுவலகம்
உரிமையாளர் பெயர் :- விக்னராஜா மகள் கலையரசி
விண்ணப்பதாரர் பெயர் :- திருமதி கலையரசி ரதீஸ்சன்
முகவரி :- கிளாங்கொடை வீதி, அளவெட்டி வடக்கு

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் மல்லாகம் உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 12, கிளாங்கொடை வீதியில் ஆதன இல. 31 இல் அமைந்துள்ள மல்லாகம் கோயிற்பற்று, அளவெட்டி இறை "தவளக்கிரி" என்ற ஆதனம் N. நாகலிங்கம் என்ற பெயரில் எமது சோலைவரி ஆதனப் பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகின்றது.

குறித்த ஆதனமானது 24.05.2013 ஆந் திகதிய பிரசித்த நொத்தாரிஸ் பொ. சுந்தரலிங்கம் அவர்கள் முகதாவில் இலக்கம் 4039 இல் அத்தாட்சிப்படுத்திய நன்கொடை உறுதி மூலம் "தவளக்கிரி" நிலப்பரப்பு 4 குளி 13.53 விஸ்தீரணமுள்ள ஆதனம் விண்ணப்பதாரரான விக்னராஜ மகள் கலையரசிக்கு வந்தடைந்துள்ளது.

குறித்த 4039ம் இலக்க உறுதி யாழ்ப்பாணக் காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள G10/01 இலக்க காணிப்பதிவுப்புத்தக பிரதி ஆதனவரிப் பெயர்மாற்ற விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் 4039ம் இலக்க உறுதியின் தாயுறுதிகளாக பிரசித்த நொத்தாரிசு பொ. சுந்தரலிங்கம் முகதாவில் 2010.10.10ம் திகதி 3005ம் இலக்கத்திலும், 1956.01.20ம் திகதி பிரசித்த நொத்தாரிசு இ. காசிநாதர் முகதாவில் 1899ம் இலக்கத்திலும் நிறைவேறிய உறுதிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும் 3005ம் இலக்க உறுதி மூலம் இவ்ஆதனத்தை விண்ணப்பதாரருக்கு நன்கொடையளித்த நாகலிங்கம் விக்னராஜா என்பவருக்கு "தவளகிரி" நிலப்பரப்பு 11, அளவுப்படி நிலப்பரப்பு 9 குளி 4.53 விஸ்தீரணமுள்ள ஆதனத்தில் சொரியலாய் 1ஃ3 பங்கு வந்தடைந்துள்ளது. மேலும் 1899ம் இலக்க உறுதியின் மூலம் "தவளகிரி" நிலப்பரப்பு 11 இல் சொரியலாய் 1/2 பங்கு வைத்திலிங்கம் நாகலிங்கம், வைத்திலிங்கம் கணபதிப்பிள்ளை ஆகியோரை வந்தடைந்துள்ளது. எனினும் குறித்த 1899ம் இலக்க உறுதியின் ஆதன அட்டவணையில் குறித்த ஆதனம் எப்படி, எவ்வாறு நாகலிங்கம் விக்னராஜாவிற்கு வழி உரித்தாக வந்தடைந்துள்ளது என 4039ம் இலக்க உறுதியில் குறிப்பிடப்படவில்லை. எனினும் விண்ணப்பதாரருக்கு இவ்வாதனம் வந்தடைந்த 4039ம் இலக்க உறுதியின் தாயுறுதிகளாக 3005ம், 1899ம் இலக்க உறுதிகளின் ஆதன அட்டவணையில் குறித்த சொரியல் ஆதனப் பாகங்கள் இணைத்து நிந்தமாக்கப்பட்டுள்ளது. மேலும் 1899ம் இலக்க உறுதி மூலம் விண்ணப்பதாரருக்கு நன்கொடையளித்த நாகலிங்கம் விக்னராஜாவிற்கு குறித்த ஆதனத்தின் எவ்வளவு பங்கு வந்தடைந்தது என்பது தொடர்பில் தெளிவற்றதன்மை காணப்படுகின்றது

**ஆதனவிபரம்**

வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், வலிகாமம் வடக்குப் பிரதேச சபை, தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவு மல்லாகம் கோவிற்பற்று, அளவெட்டி வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவு து/215, அளவெட்டி இறை "தவளக்கிரி" நிலப்பரப்பு 09 குளி 04.53, இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் A. அருள்நேசன் 2010ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 20ம் திகதி 0724ம் இலக்கத்தில் வரைந்த படத்தில் துண்டு 1 (Lot1) எனச் சுட்டப்பட்டுள்ளது. இதில் மேற்குப் பக்கமாக நிலப்பரப்பு நான்கு குளி பதின்மூன்று

தசம் ஐந்து மூன்றும் (நில.பர.04 குளி 13.53) இதன் மேற்கெல்லை ஒழுங்கையின் மேற்கெல்லை ஆதனத்துக்குள்ளிருக்கும் கிணற்றில் முழு ஆதனத்துக்குரிய 1/6 பங்கில் இதற்குரிய பங்கும் வழமையான வழி வாய்க்காற் பாவிப்புரித்தும், இதற்கு எல்லைகள் பின்வருமாறு

கிழக்கு :- மிகுதி ஆதனம்
வடக்கு :- நிர்மலேந்திரன் பெண் சூரியகலாவின் ஆதனம்
மேற்கு :- ஒழுங்கை
தெற்கு :- ஒழுங்கை

இவ்வெல்லைக்குட்பட்டவைகளுள் குறித்த கிணற்றிலிருந்து மேற்கெல்லை ஒழுங்கையூடாக வந்து இதன் வடக்கெல்லையருகாக இதன் கிழக்கெல்லை மிகுதி ஆதனத்துக்குச் செல்லும் வழிவாய்க்காற் பாவிப்புரித்துப் புறநீங்கலாக இது முழுவதும் இதற்குரியவைகளும்

மேற்குறித்த ஆதனத்தை விக்னராஜா மகள் கலையரசி என்னும் பெயரில் ஆதன பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்த முப்பது (30) நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விக்னராஜா மகள் கலையரசி எனும் பெயருக்கு ஆதன உரிமைமாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதன உரிமைமாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்குபிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. சுந்தரேஸ்வரன்சுதர்ஜன்**
**செயலாளர்**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை**
**காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)**

# மரண அறிவித்தல்

தோற்றம்
01 . 03 . 1936



மறைவு
22 . 04 . 2025

## விஜயலஷ்மி பத்மநாதன்

தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும், வெள்ளவத்தை, (கொழும்பு), வவுனியா, தொல்புரம் ஆகிய இடங்களை வசிப்பிடமாகக் கொண்ட விஜயலஷ்மி பத்மநாதன் அவர்கள் நேற்று (22.04.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை - மாரிமுத்து தம்பதியரின் அன்பு மகளும், பத்மநாதன் (இளைப்பாறிய லிகிதர், சிறைச்சாலைத் திணைக்களம், உணவுத் திணைக்களம்) அவர்களின அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கதிர்காமர் வேலுப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வர்களான சபாரட்ணம்,(இளைப்பாறிய மின்னசாரசபை உத்தியோகத்தர்), கிருஸ்ணபிள்ளை (வர்த்தகர்), செல்வரட்ணம் (இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்), சிவபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஸ்ரீகரன் (இளைப்பாறிய தொழில்நுட்பவியலாளர்), காலஞ்சென்ற சுபாகரன் மற்றும் ரஜினி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சற்குணதேவி, நளினி, ஜெயகாந்தன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், கௌசிகா (ஆசிரியை வ/காமினி தேசிய பாடசாலை), கேசவன் (திட்ட முகாமைத்துவ ஒருங்கிணைப்பாளர் - கனடா), துளசி, ஜனனி (சுவிஸ்), சாமினி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.04.2025) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தொல்புரம் கிழக்கு,**
**சுழிபுரம்.**

(CS/58030) J-1

**தகவல் :**
**குடும்பத்தினர்**
077 958 3573

# மரண அறிவித்தல்

தோற்றம்
13 . 03 . 1940



மறைவு
21 . 04 . 2025

## தர்மலிங்கம் அன்னலட்சுமி

காரைநகர் தங்கோடை, செம்பாட்டைப் பிறப்பிடமாகவும், சின்னாலடி மற்றும் ஓட்டுமடம் வீதி, சிவலிங்கப்புளியடியை வதிவிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் அன்னலட்சுமி அவர்கள் நேற்றுமுன்தினம் (21.04.2025) திங்கட்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரவேலு தர்மலிங்கம் (முன்னாள் வர்த்தகர் K.A வேலுப்பிள்ளை ஸ்ரோஸ் - பதுளை) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை மாணிக்கம் தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான குமாரவேலு பார்வதி தம்பதியரின் அன்பு மருமகளும், ஜெயலலிதா, விஜயலலிதா, சிவரூபன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவகுமாரன் (ஓய்வுநிலை முகாமையாளர் - இலங்கை வங்கி), தயானந்தா (ஓய்வுநிலை பிரதேசசெயலர்), சிவதர்சினி ஆகியோரின் மாமியாரும், சிவதர்சினி, தயானந்தன், சிவரஞ்சினி, சிவரூபன், கோபிகாந், சாம்பவி கணநாதன், சுஜீவன், சாரங்கன், ஆரங்கன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஷாருஜன், யுவிஷன், சிவானுஜன், சிவாந், சங்கவி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.04.2025) வியாழக்கிழமை காலை 07.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.


**இல. [illegible], ஓட்டுமடம் வீதி,**
**சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம்.**

(CS/58045) J-1

**தகவல் :**
**குடும்பத்தினர்**
077 223 1112

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



**சரவணமுத்து சுப்பிரமணியம் (மணியம்)**

குப்பிளான் வடக்கைப் பிறப்பிடமாகவும் கரம்பைக் குறிச்சி கிழக்கு வரணியை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து சுப்பிரமணியம் அவர்கள் நேற்று முன்தினம் (21.04.2025) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து-கதிராசிப்பிள்ளை தம்பதியின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற வேலாயுதம்பிள்ளை- கதிர்காமிப்பிள்ளை தம்பதியின் பாசமிகு மருமகனும் காலஞ்சென்ற இந்திராணி (செல்லம்) அவர்களின் அன்புக் கணவரும் விஜீத்திரா, விஜீபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் நிறோஜ், ஜனார்த்தனி ஆகியோரின் அன்பு மாமனாரும் வினிதன், விருஸ்கா, ஆகாஸ் ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான நேசம்மா, இராசலிங்கம், இராஜேஸ்வரன் மற்றும் கந்தசாமி, யோகேஸ்வரன், ஜெகதீஸ்வரன் ஆகியோரின் அன்பு சகோதரனும் பரமானந்தன், இந்திராணி, கலைவாணி, கலா, ரூபி, பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.


அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (24.04.2025) வியாழக்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம் பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொடிக்காடு இந்து மயாணத்தில் எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**குடும்பத்தினர்.**
001 8173 199393-ஜீவன்
075 952 0791-விஜி

## மரண அறிவித்தல்

தோற்றம்
08 . 08 . 1933



மறைவு
22 . 04 . 2025

**முத்துத்தம்பி பஞ்சலிங்கம்**

ஊரெழுவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்துலிங்கம் பஞ்சலிங்கம் அவர்கள் நேற்று (22.04.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துத்தம்பி-இராசம்மா தம்பதியின் அன்பு மகனும் காலஞ்சென்ற தம்பு-சின்னத்தங்கம் தம்பதியின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும் ஜெயமாலா, ஜங்கரன், விஷ்ணுகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சர்வானந்தம், சாருமதி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சஜீவன், ஜெதுஷா, விபிஷா, அக்ஷயா ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற அன்னரத்தினம், அமிர்தலிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (23.04.2025) புதன்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் இடம் பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணிக்கு ஊரெழு பொக்கனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

ஊரெழு கிழக்கு,
சுன்னாகம்.

தகவல்:
**குடும்பத்தினர்.**
077 867 2449

# மரண அறிவித்தல்

## அழகரத்தினம் விஜயராஜன்



தோற்றம் 27.01.1960 மறைவு 21.04.2025

சிவன்கோவிலடி சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், சிறுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட அழகரத்தினம் விஜயராஜன் அவர்கள் நேற்று முன்தினம் (21.04.2025) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அழகரத்தினம்-பரமேஸ்வரி தம்பதியின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து-மகேஸ்வரி தம்பதியின் பாசமிகு மருமகனும் தெய்வநாயகி அவர்களின் அன்புக் கணவரும், சஜந்தா, பாலசயந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் பிரசன்னரூபன், பாரதி ஆகியோரின் மாமனாரும் கிருஷ்ணராஜன், புஷ்பலதா ஆகியோரின் அன்புச் சகோதரனும் யோகரத்தினம், காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் இராசமலர் ஆகியோரின் அன்பு மருமகனும் மதிவதனி, சதானந்தன் நல்லநாதன், சிவநேசன், கேதீஸ்வரி, சோதிநாதன், கிருபாகரன், பத்மலோசினி, தெய்வராணி ஆகியோரின் மைத்துனரும் நிவேஸ்கன், ஜசானியா ஆகியோரின் பேரனும் இராமதாஸ், சாயுச்சியபதி, குகதாஸ், ரகுதாஸ், ராகவதாஸ், குரபரன்தாஸ், தயாபதி, அமரபதி ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.04.2025) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சிறுப்பிட்டி காளையன்புலம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சிறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி.

தகவல்:
**குடும்பத்தினர்**
44 7916 152814-பாலசயந்தன்
44 7941 969175-கிருஷ்ணராஜன்(சிறீ)
44 7949 997007-புஷ்பலதா
077 484 3386

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தபால்மூல...

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு, எதிர்வரும் 24ஆம், 25ஆம் திகதிகளில் (நாளை, நாளைமறுதினம்) தபால்மூல வாக்களிப்பு இடம்பெறவுள்ளது. இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் முழுமையடைந்துள்ளன. வாக்குப்பெட்டிகளை உரிய வாக்களிப்பு நிலையங்களுக்கு அனுப்பிவைக்கும் ஏற்பாடுகள் இடம்பெற்றுவருகின்றன.
தபால் மூல வாக்களிப்பின்போது, ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணமாக அலுவலக அடையாள அட்டை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணமாக அலுவலக அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பதற்கான தெரிவு முன்னதாக வழங்கப்பட்டிருந்தபோதிலும், கடந்த காலங்களில் பதிவான சில சம்பவங்களைக் கருத்திற்கொண்டு இம்முறை அது தவிர்க்கப்பட்டுள்ளது.
எனவே, அலுவலக அடையாள அட்டையை ஆள் அடையாள ஆவணமாகச் சமர்ப்பிக்கின்ற தபால் வாக்காளர்களுக்கு வாக்குச்சீட்டை அடையாளமிட வாய்ப்பளிக்கக்கூடாது. இந்த நடைமுறை மிகவும் இறுக்கமாகப் பின்பற்றப்படும். தபால்மூல வாக்களிப்புக்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட அடையாள அட்டையை வழங்குவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதன்படி, தேசிய அடையாள அட்டை, செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் கடவுச்சீட்டு, தேர்தல் ஆணைக்குழுவினால் வழங்கப்படும் தற்காலிக அடையாள அட்டை, தேசிய அடையாள அட்டைக்குப் பதிலாக ஆட்பதிவு திணைக்களத்தால் வழங்கப்பட்ட உறுதிப்படுத்தல் கடிதம் ஆகிய ஆவணங்களில் ஏதேனும் ஒன்று தபால்மூல வாக்களிப்பின்போது ஏற்றுக்கொள்ளப்படும் - என்றார். (அ-ம-44-சி)

## பாப்பரசர்...

கத்தோலிக்கத் திருச்சபையின் தலைவரான, பாப்பரசர் பிரான்சிஸின் இறுதிச் சடங்கு எதிர்வரும் சனிக்கிழமை இடம்பெறும் என்று வத்திக்கான் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.
பாப்பரசர் பிரான்சிஸ் நேற்றுமுன்தினம் காலை உயிரிழந்தார். மாரடைப்பு மற்றும் மாரடைப்பால் ஏற்பட்ட பக்கவாதம் காரணமாகவே அவர் உயிரிழந்துள்ளார் என்று உடற்கூற்றுப் பரிசோதனைக்கு அப்பாற்பட்ட உயர் மருத்துவப் பரிசோதனையின் அடிப்படையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
மருத்துவப் பரிசோதனைகளால் மட்டும் பாப்பரசரின் மரணம் உறுதிப்படுத்தப்படுவதில்லை. திருச்சபை வழக்கத்தின்படி, பாப்பரசரின் நெருங்கிய உதவியாளர் பாப்பரசருக்கு முன்பாக நின்று அவரை மூன்று முறை அழைக்கவேண்டும். இதைத்தொடர்ந்தே பாப்பரசரின் புகழுடலை சவப்பெட்டியில் வைக்கமுடியும். இந்தச் சடங்குகள் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்றன.
தொடர்ந்து பாப்பரசர் பணிசெய்த அலுவலகம் 'சீல்'வைத்து மூடப்பட்டதுடன், பாப்பரசரின் முத்திரை மோதிரம் உடைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, குருத்துவ ஆடை அணிவிக்கப்பட்டு, பாப்பரசரின் புனிதவுடல், வழக்கமாகப் பயன்படுத்தப்படும் ஆடம்பரமான சவப்பெட்டிகள் அல்லாமல் மிகவும் சாதாரணமான சவப்பெட்டியில் அவரின் விருப்பத்துக்கு அமைய வைக்கப்பட்டுள்ளது.
இன்று அவரின் புனிதவுடல் பொதுமக்களின் அஞ்சலிக்காக காண்பிக்கப்படும். இதைத் தொடர்ந்து எதிர்வரும் சனிக்கிழமை இறுதிச் சடங்குகள் இடம்பெறவுள்ளன.
எதிர்வரும் சனிக்கிழமை பாப்பரசர் பிரான்சிஸின் உடல் புனித பீட்டர்ஸ் பேராலயத்தில் இருந்து இறுதிச் சடங்குகளுக்காக புனித மேரி மேஜர் பேராலயத்துக்கு கொண்டு செல்லப்படும். கடந்த நூறு ஆண்டுகளில் சென். பீற்றர்ஸ் பேராலயத்துக்கு வெளியே அடக்கம் செய்யப்படும் திருத்தந்தை இவராவார். இறுதிச் சடங்கு இடம்பெறும் இடத்தையும் அவரே தெரிவுசெய்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-இ)

## தமிழ்த்...

மக்கள் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்குத் தமது ஆதரவை வழங்கவேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நாடாளுமன்றத் தேர்தலைத் தொடர்ந்து நான் அரசியற் செயற்பாடுகளில் இருந்து சற்று விலகியிருந்தேன். பலரும் என்னை அணுகினார்கள். எனினும், நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கே எனது ஆதரவை வழங்கியுள்ளேன். தமிழ்த் தேசியத்தை எந்தவித சமரசமும் இல்லாமல் கொண்டு செல்கின்ற ஒரு தரப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியே ஆகும். எனவேதான், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை ஆதரிக்கும் நிலைப்பாட்டை நான் வரித்துக்கொண்டேன்.
தமிழரசுக் கட்சியில், கட்சிக்காக உழைத்தவர்களையும், அர்ப்பணிப்புடன் பணியாற்றியவர்களையும் அவர்கள் விலக்கி வைத்தனர். ஒரு தனிநபரின் நிகழ்ச்சி நிரலுக்கு அமையவே செயற்பட்டனர். கிடைக்கக்கூடிய உச்சபட்ச வாக்குகளைக் கருத்திற்கொள்ளாமல் தன்னிச்சையாகத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. தமிழரசின் தலைமைத் தெரிவின்போது, பலரால் மாற்றுத் தெரிவாக ஆதரிக்கப்பட்டவரும், தம்மை ஆதரித்தவர்களுக்காக களத்தில் இறங்கித் துணிவாகக் குரல்கொடுக்கவில்லை. மூத்த உறுப்பினர்களைக் கட்சியில் வைத்திருக்கவும், மதிக்கவும் தமிழரசுக் கட்சி தவறிவிட்டது. கட்சிக்காக நாங்கள் தொகுதிகளில் செலுத்திய உழைப்புகள் அனைத்தும் அர்த்தம் இல்லாமலாக்கப்பட்டன.
நிலையான தமிழ்த் தேசியம், இளைஞர்களுக்கான அரசியல் என அனைத்து விடயங்களும் கஜேந்திரகுமார் அணியில் உள்ளது. தமிழர்களை ஒரு கட்டுக்கோப்புக்குள் கொண்டுவரவேண்டும் என அவர் முயற்சிகளை எடுத்துள்ளார். கட்சி வளர்வது, கட்சியை வளர்ப்பது என்பதற்கு அப்பால் மக்களின் காலத்தேவை கருதி நாங்கள் செயற்படவேண்டும். அதுவே சரியான தலைமைத்துவத்தின் மாண்பு. ஆதலால், தமிழ்த் தேசியத்தின் பாதையில் பயணிக்கும் முன்னணியை நாம் பலப்படுத்துவோம்.
பிரிவினைகளைக் கடந்து நாங்கள் ஒன்றிணையாவிட்டால், கொழும்பில் இருந்து வரும் கட்சிகள் கால்பதிக்கும் ஆபத்து நேரும். ஏற்கனவே அந்த ஆபத்து எமக்கு அருகாக வந்[illegible] னும் அந்த ஆ[illegible] வடக்கு, கிழக்கு என எம்மைப் பிரித்தவர்கள் ஜே.வி.பி.யினர் இதை நான் மீண்டும் மீண்டும் கூறிவருகின்றேன். எதிர்கால இருப்பை பலப்படுத்தவும், வளப்படுத்தவும் தமிழ்த் தேசியக் கட்சிகளை நாங்கள் தெரிவு செய்யவேண்டும். அதற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சிறந்த தெரிவாக அமையும் - என்றார். (அ-ம-26-125)

## கிணற்றுக்குள்...

யாழ்ப்பாணம் - அத்தியடிப் பகுதியில் கிணற்றுக்குள் இருந்து ஆசிரியை ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
சபாரத்தினம் விஜயலக்சுமி (வயது - 79) என்ற ஓய்வுநிலை ஆசிரியையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந. பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## அத்துமீறிய...

வருகின்றனர் என்று பாதிக்கப்பட்ட மருத்துவர்களால் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.
கடந்த 2ஆம் திகதி மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவுக்குள் அந்தப் பெண் அத்துமீறி நுழைந்தார் என்றும், தகாத வார்த்தைகளைப் பயன்படுத்தியதுடன், மருத்துவர்களுக்கு உயிரச்சுறுத்தல் விடுக்கும் வகையில் செயற்பட்டார் என்றும் பாதிக்கப்பட்ட மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.
இது தொடர்பில் தெல்லிப்பழைப் பொலிஸாரிடம் முறையிடப்பட்டிருந்தது. பொலிஸார் சம்பவம் தொடர்பில் முறைப்பாட்டைப் பதிவுசெய்து, நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தொடர்ந்துள்ள போதிலும், இன்னமும் சந்தேகநபரைக் கைது செய்யவில்லை என்றும் மருத்துவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.
சம்பவத்துடன் தொடர்புடைய பெண், செல்வாக்கு மிக்க பின்னணியைக் கொண்டவர் என்றும், இதனால்தான் அவரைக் கைதுசெய்வதற்கு பொலிஸார் அச்சப்படுகின்றனர் அல்லது பின்னிற்கின்றனர் என்றும் மருத்துவர்கள் மேலும் கூறியுள்ளனர். (அ-ம-26)

## துப்பாக்கி...

அவருடைய மகனையும் பொலிஸார் துப்பாக்கி முனையில் அச்சுறுத்திக் கைதுசெய்துள்ளனர். இந்தச் சம்பவம் மருதங்கேணியில் நேற்று இடம்பெற்றுள்ளது.
சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-
மருதங்கேணி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வசிக்கும், உள்ளூராட்சி வேட்பாளர்களுக்கான சந்திப்பொன்றை பொலிஸார் ஒழுங்கமைத்துள்ளனர். இந்தச் சந்திப்பில் கலந்துகொள்ளுமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயற்பாட்டாளர் ஜெகதீஸ்வரன் சற்குணாதேவியும் அழைக்கப்பட்டிருந்தார். எனினும், அவருடைய வேட்புமனு நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளதால், அவர் தற்போது வேட்பாளர் இல்லை. எனவே, அவர் பொலிஸாரின் கூட்டத்தில் கலந்துகொள்வதைத் தவிர்த்திருந்தார். இதையடுத்து, அவருடைய வீட்டுக்கு துப்பாக்கிகள் சகிதம் நேற்றுப் பொலிஸார் சென்றுள்ளனர். இதன்போது, எதற்காக கலந்துரையாடலுக்கு வரவில்லை என்ற பொலிஸாரின் கேள்விக்கு, 'நீதிமன்றத்தால் வேட்புமனு நிராகரிக்கப்பட்டுள்ளது. எனவே, தற்போது நான் வேட்பாளர் இல்லை. எனவே கலந்துரையாடலுக்கு வரவில்லை' என்று சற்குணாதேவி பதில் வழங்கியுள்ளார்.
எனினும் அதை ஏற்றுக்கொள்ளாத பொலிஸார், அவரை அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டுள்ளனர். தனது தாயாருடன் எதற்காகத் தர்க்கப்படுகின்றீர்கள்? என்று அவரின் மகன் பொலிஸாரிடம் கேட்டுள்ளார். இதைத் தொடர்ந்தே, துப்பாக்கிமுனையில், சாரத்தைப் பிடித்து இழுத்து அந்த இளைஞனைப் பொலிஸார் கைது செய்தனர். அத்துடன், மேலங்கி இல்லாமல் சாரத்துடன் அந்த இளைஞரை பொலிஸ் நிலையம் வரை இழுத்துச் சென்றனர்.

**அமைப்பாளரும் கைது**

இதையடுத்து, பொலிஸாரால் கைது செய்யப்பட்ட தனது மகனைப் பார்க்கச் சென்ற சற்குணாதேவியும் பொலிஸ் நிலையத்தில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளார். பொலிஸாரின் இந்த அராஜகமான நடத்தைக்கு கடும் கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டுவருகின்றன. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரான கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் கண்டனத்தைப் பதிவுசெய்துள்ளார். (அ-ம-26)

## டான்...

ஆரம்பத்தில் பொலிஸ் ஊடகப்பிரிவு அறிவித்திருந்தாலும், பின்னர் டான் பிரியசாத் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைபெற்று வருகின்றார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
கொழும்பு, வெல்லம்பிட்டிய பகுதியில் வைத்தே டான் பிரியசாத் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. நபரொருவருடன் அவ்வேளையில் அவர் மது அருந்திக்கொண்டிருந்தார் எனத் தெரியவருகின்றது. மற்றைய நபருக்கும் சிறு காயம் ஏற்பட்டுள்ளது.
மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே துப்பாக்கிச்சூட்டை நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர் எனக் கூறப்படுகின்றது. இதில் படுகாயமடைந்த டான் பிரியசாத் கொழும்பு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (இச்செய்தி அச்சுக்கு செல்லும்வரை டான் பிரியசாத் உயிரிழந்துவிட்டார் என அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படவில்லை.)
கடும் போக்குடைய சிங்கள தேசியவாத அணியை சேர்ந்த டான் பிரியசாத், அரகலய புரட்சியின்போது, போராட்டக்காரர்களின் தாக்குதலுக்கு இலக்கானார். எதிர்வரும் உள்ளாட்சித் தேர்தலில் கொலன்னாவ நகரசபைக்காக பெரமுனவின் சார்பில் போட்டியிடுகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

## அழகுசாதனப்...

பட்டுள்ளன. இலங்கைக் கடற்படையால் கடந்த 16ஆம் திகதி மன்னார் கிராஞ்சி கடற்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின்போதே, இந்த அழகுசாதனப் பொருள்கள் கடலில் மிதந்துகொண்டிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளன.
சந்தேகநபர்கள் எவரும் கைதுசெய்யப்படவில்லை. அந்த அழகுசாதனப் பொருள்கள் மேலதிக சட்டநடவடிக்கைக்காக ஜெயபுரம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (அ-ம-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளாதாரப் பின்னடைவால் தவறான முடிவெடுத்து இளைஞர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஏப். 23
பொருளாதாரப் பின்னடைவால் ஏற்பட்ட மன விரக்தி காரணமாக, இளைஞர் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார்.
யாழ்ப்பாணம் நகரப் பகுதியைச் சேர்ந்த குறித்த இளைஞர், ஆரியகுளம் சந்திக்கு அருகாக தனது ஓட்டோவை நிறுத்திவிட்டு, தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் தெரிவித்துள்ளனர்.
இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## செவ்வந்தி, ரணவீர தகவல்கள் இல்லை

கொழும்பு, ஏப். 23
கொழும்பு – புதுக்கடை நீதிமன்றத்துக்குள் பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி பாதாள உலக கும்பலைச் சேர்ந்த கணேமுல்ல சஞ்சீவ என்பவரை சுட்டுக் கொலைசெய்வதற்கு துப்பாக்கிதாரிக்கு உதவி செய்தாரெனக் கூறப்படும் இஷாரா செவ்வந்தி மற்றும் 2010 ஆம் ஆண்டில் போலி ஆவணங்களைத் தயாரித்து கிரிபத்கொடைப் பிரதேசத்தில் உள்ள அரச காணி ஒன்றை விற்பனை செய்த சம்பவம் தொடர்பில் பொலிஸாரால் தேடப்பட்டுவரும் முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரணவீர ஆகிய இருவர் தொடர்பிலும் இதுவரை எவ்வித தகவல்கள் கிடைக்கப்பெறவில்லை என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.
கணேமுல்ல சஞ்சீவ என்பவரின் கொலை சம்பவத்துடன் தொடர்புடைய இஷாரா செவ்வந்தி பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதியிலிருந்து மாயமாகியுள்ளார்.
முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரணவீர மார்ச் மாதம் 07 ஆம் திகதியிலிருந்து மாயமாகியுள்ளார்.
பிரசன்ன ரணவீரவை கைதுசெய்வதற்காக களனி பிரதேசத்தில் உள்ள அவரது வீட்டுக்குச் சென்றபோது அவர் அங்கிருந்து தப்பிச்சென்றுள்ளார்.
குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச–இ)

## ஆவண வெளியீடு

*யாழ்ப்பாணம், ஏப்.23*
*உள்ளூராட்சிசபைத் தேர்தலை முன்னிட்டுத் தமிழ்த் தேசியப் பேரவையின் யாழ்ப்பாணம் மாநகர சபைக்கான செயற்றிட்ட முன்மொழிவுகள் தொடர்பான ஆவண வெளியீடு நிகழ்வு மாட்டீன் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அம்மா ஒய்வகத்தில் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.*
*(ச-41-66)*

## ஜனாதிபதி...

தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
சிரேஸ்ட பொலிஸ்மா அதிபர் அசங்க கர விட்ட இந்த குழுவுக்குத் தலைமைதாங்குகின்றார். குற்றப் புலனாய்வுப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர், குற்றப் புலனாய்வுப் பிரிவின் இயக்குநர், பயங்கரவாத விசாரணைப் பிரிவின் இயக்குநர் ஆகியோரும் இந்தக் குழுவில் இடம்பெற்றுள்ளனர். பிரதான குழுவின் கீழ் மேலும் பல குழுக்களை உருவாக்கியுள்ளோம். பிரதான குழு ஆணைக்குழுவின் அறிக்கையை ஏற்கனவே ஆராய ஆரம்பித்துள்ளது. 66 ஆயிரம் பக்கங்களைக் கொண்ட அறிக்கையை ஆராய்ந்த பின்னர், கிடைக்கும் புதிய விடயங்கள் குறித்து புதிய விசாரணைகளை முன்னெடுப்போம் - என்றார். (அ-ம-44)


## ஹெரோய்னுடன் இளைஞர் கைது

யாழ்ப்பாணம், ஏப். 23
யாழ்ப்பாணம் பொம்மைவெளிப் பகுதியில் ஹெரோய்ன் போதைப் பொருளுடன் இரண்டு இளைஞர்கள் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.
யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய, மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின்போதே அந்த இளைஞர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட நபர்களின் உடமையில் இருந்து 620 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது. அவர்களிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன - என்றார். (அ-ம-20-26-23)

**வீடு வாடகைக்குத் தேவை**
4பேர் தங்குவதற்கு ஏற்ற வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை.
இடம் யாழ் நகரை அண்டிய பகுதியில் வாடகைக்குத் தேவை.
தொடர்பு: 077 486 1586

**தென்னந் தோட்டக்காணி விற்பனைக்கு**
பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் 40 ஏக்கர் வளமான தென்னைக்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு. பகுதியாகவும் பெற்றுக் கொள்ளலாம். விலை பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு:- Whatsapp:- 0044 740 537 3526
(CS/57780) J-1

## மரண அறிவித்தல்



### அமரர் வேலுப்பிள்ளை பேரம்பலம்

**(ஓய்வுபெற்ற சாலை பரிசோதகர் - இ.போ.ச)**

காரைநகர் பயிரிக்கூடலை பிறப்பிடமாகவும், சத்திரந்தை, களபூமி, காரைநகர் மற்றும் தலையாழி, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை பேரம்பலம் (ஓய்வுபெற்ற சாலைப்பரிசோதகர் - இ.போ.ச) அவர்கள் நேற்று (22.04.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சுந்தரம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், தங்கேஸ்வரியின் அன்புக் கணவரும், நளாயினி (Engineer - Singapore), கிரிசா (Nursing officer UOJ), மாலினி (Doctor, NHSL) ஆகியோரின் அன்புத் தந்தையும், றோய்நிக்சன் (Engineer - Singapore), ஶ்ரீராம் (IT Engineer) ஆகியோரின் அன்பு மாமனாரும், சஞ்சிகா, சர்மிகா, சக்திசயன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற கனகசபை மற்றும் பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், தகோமணி, தம்பிஐயா மற்றும் தனபாக்கியம், தங்கரத்தினம் ஆகியோரின் பாசமிகு மைத்துனருமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.04.2025) வியாழக்கிழமை முற்பகல் 08.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தோற்றம் 16.01.1947 — மறைவு 22.04.2025

இல. 33, சபாபதி வீதி,
தலையாழி,
கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்
077 493 8395, 077 178 3733
(CS/58028) J-1

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.04.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org